**வேர் பூச்சி தாக்குதலால் கடலை விவசாயம் பாதிப்பு**

First Published : 24 Apr 2011 11:48:41 AM IST

திண்டுக்கல், ஏப். 23: கடலைச் செடியை வேர் பூச்சி எனும் நோய் தாக்கியதால், போதிய விளைச்சல் இல்லாமல் பயிரிட்ட விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம் மடூர் ஊராட்சிப் பகுதியில் விவசாயிகள் கடலையைப் பயிரிட்டுள்ளனர். கடலைச் செடியில் வேர் பூச்சி எனும் நோய் தாக்குதல் காரணமாக, விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், கடலையை அறுவடை செய்துள்ள விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

இது குறித்து, கடலை விவசாயி கோபாலு கூறியது:

ஒன்றரை ஏக்கர் பரப்பில் சுமார் ரூ. 14 ஆயிரம் செலவு செய்து கடலையைப் பயிரிட்டுள்ளேன். கடலைச் செடியில் காய்கள் பூமிக்கு அடியில் தான் காய்கின்றன. இதனால், நோய் தாக்குதல் ஏதேனும் ஏற்பட்டால் அது உடனடியாகத் தெரிவதில்லை. எங்களது தோட்டத்தில் சராசரியாக நூறு செடிக்கு 40 செடிகள் வேர் பூச்சி எனும் நோய் தாக்குதலுக்கு ஆளாகி உள்ளன. இதன் காரணமாக, கடலை விளைச்சல் குறைந்தும் அதையும் மீறி விளையும் காய்கள் செடியை பறிக்கும்போது பூமியிலேயே தங்கியும் விடுகின்றன.

கடந்த ஆண்டு 38 கிலோ கொண்ட மூட்டை ரூ. 1,200-க்கு விற்பனை ஆனது. இதுவே கடலை விவசாயிக்கு நஷ்டமான விலைதான். இந்த ஆண்டு ஒரு மூட்டை ரூ. 1,300-க்கு விலை போகிறது. கடந்த ஆண்டு விவசாய கூலியாக ரூ. 80 கொடுக்கப்பட்டது. தற்போது ரூ. 100 கூலியாகக் கொடுத்தாலும் வேலைக்கு ஆள்கள் கிடைப்பதில்லை.

எனவே, விவசாயம் செய்வதை விட கூலி வேலைக்கு செல்வது என்பது லாபகரமாக இருக்குமோ எனத் தோன்றுகிறது. இதனால், இப்பகுதியில் இதுவரை கடலையைப் பயிரிட்டு வந்த விவசாயிகள் இதை கைவிட்டு, பூக்கள் பயிரிட முடிவு செய்துள்ளனர்.

மேலும், கடலை விதையின் விலை அதிகமாக உள்ளதால், தொடர்ந்து கடலையை பயிரிடுவது லாபகரமாக இருக்காது.

மானிய விலையில் விதைகள் கிடைத்தால் அடுத்த சாகுபடியின்போது, கடலையைப் பயிரிடலாம் அல்லது வேறு விவசாயத்தை மாற்றித் தான் செய்யவேண்டும் என வேதனையுடன் தெரிவித்தார்.

**கோவையில் கொட்டுகிறது கோடைமழை**

First Published : 24 Apr 2011 10:58:32 AM IST

கோவை, ஏப். 23: கோவை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாகக் கொட்டும் கோடைமழையால், கோடைக்காலம் குளிர்காலமாக மாறியுள்ளது.

÷கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த வியாழக்கிழமை முதல் தொடர்ந்து மழை பெய்துவருகிறது. மார்ச், ஏப்ரல், மே, ஜூன் மாதம் வரை நீடிக்கும் கோடை காலத்தில் தகிக்கும் வெப்பத்தில் மக்கள் தவிப்பது வழக்கம். இந்தாண்டு கோடைகாலம் மக்களை வாட்டி வதக்காமல், வருடிச் செல்லும் வகையில் காலநிலையில் மாற்றம் நிலவுகிறது.

மார்ச் மாதத்திலிருந்து ஏப். 13-ம் தேதி வரை தேர்தல் சூடு பரவியிருந்ததால், மக்களுக்கு கோடை வெப்பம் அவ்வளவாகத் தெரியவில்லை.

இந்நிலையில் கடந்த சில தினங்களாக கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கோடைமழை பெய்துவருவதால், கோடை வெப்பம் காணாமல் போய்விட்டது. வெப்பம் நீங்கி குளிர்காலம் போல பருவநிலை மாறியுள்ளது.

÷கடந்த வியாழக்கிழமை இரவு பெய்த மழை, இதுவரை நீடிக்கிறது. சில தினங்களாக பெய்துவரும் மழையால் கோவை நகரில் பல்வேறு பகுதிகளில் வீடுகளுக்குள் மழைநீர் புகுந்தது. அவிநாசி மேம்பாலம், வடகோவை மேம்பாலத்துக்கு கீழே மழைநீர் தேங்குவதால் அவ்வழியாக வாகனங்களில் செல்வோருக்கு சிரமம் ஏற்பட்டுள்ளது.

ஒருசில இடங்களில் சாலையோர மரங்கள் வேருடன் சாய்ந்து விழுந்தன.

÷கோவை மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் சனிக்கிழமை காலை 8 மணி வரையில் பதிவான மழை அளவு விவரம்:

÷சின்னக்கல்லார்: 54 மி.மீ, பொள்ளாச்சி: 18 மி.மீ, வால்பாறை: 17 மி.மீ, சின்கோனா: 11 மி.மீ., வால்பாறை பிஏபி பகுதி: 9 மி.மீ., பெரியநாயக்கன்பாளையம்: 4 மி.மீ, வேளாண்மை பல்கலைக்கழகம்: 3 மி.மீ, கோவை தெற்கு: 2 மி.மீ, விமான நிலையப் பகுதி: 19 மி.மீ, அன்னூர் 1 மி.மீ, சூலூர்: 1 மி.மீ, மழையளவு பதிவாகியுள்ளது.

÷தட்போதைய மழையால் ஏற்பட்டுள்ள குளுகுளு காலநிலை மக்களை குஷிப் படுத்தியுள்ளது.

**காவேரிபாக்கத்தில் 83 மி.மீ. மழை**

First Published : 24 Apr 2011 03:02:11 PM IST

வேலூர், ஏப்.23: வேலூர் மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை இரவு நல்ல மழை பெய்தது.

இதனால் சனிக்கிழமை மாவட்டத்தில் பரவலாக வெயிலின் கடுமை தெரியவில்லை.

சனிக்கிழமை காலை 8 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு:
வேலூர் 48.2, காவேரிப்பாக்கம் 82.6, வாலாஜாபேட்டை 67, சோளிங்கர் 63, அரக்கோணம் 62, ஆலங்காயம் 45, வாணியம்பாடி 27, ஆர்க்காடு 42.6, ஆம்பூர் 21, திருப்பத்தூர் 24, குடியாத்தம் 10.6, மேல்ஆலத்தூர் 8.6. வேலூர், வாலாஜாபேட்டையில் சனிக்கிழமை இரவு லேசான மழை பெய்தது. திருப்பத்தூர், வாணியம்பாடியில் பலத்த மழை பெய்தது.

**கமுதி பகுதியில் கோடை மழை**

First Published : 24 Apr 2011 12:22:14 PM IST

கமுதி, ஏப். 23: கமுதி பகுதியில் கோடை மழை அடுத்தடுத்து பெய்துள்ளது. இதனால் கோடை விவசாயம் தீவிரம் அடைந்துள்ளது.

ஏப்.17-ல் கமுதி பகுதியில் கோடை மழை பெய்யத் தொடங்கியது. அடுத்தடுத்து பெய்த கோடை மழையால் கோடை விவசாயம் தீவிரம் அடைந்துள்ளது. நெல், பருத்தி, உளுந்து, நிலக்கடலை உள்ளிட்ட பயிர்கள் தற்போது பெய்துள்ள கோடை மழையால் செழிப்புடன் உள்ளன. அடுத்த பருவகால விவசாயத்துக்காக வயல்களில் கோடை உழவு உழுவதற்கு, தற்போது பெய்துள்ள கோடை மழை நல்ல பயன் தரும் என்று விவசாயிகள் கூறினர். மழையால் கோடை வெப்பம் ஓரளவு தணிந்துள்ளது.

**அணைகளில் நீர் வரத்து அதிகரிப்பு**

First Published : 24 Apr 2011 12:04:42 PM IST

தேனி, ஏப். 23: தேனி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக பரவலாக மழை பெய்து வருவதால், அணைகளில் நீர் வரத்து அதிகரித்துள்ளது.

÷மாவட்டத்தில் கோடை வெயில் சுட்டெரித்து வந்த நிலையில், கடந்த சில நாள்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. சனிக்கிழமை மாவட்டம் முழுவதும் கன மழை பெய்தது.

÷பெரியாறு அணையில் 43 மி.மீ., தேக்கடியில் 59.8, வைகை அணையில் 22, கூடலூரில் 19.5, சண்முகாநதி நீர்த்தேக்கத்தில் 3, உத்தமபாளையத்தில் 75, வீரபாண்டியில் 8, மஞ்சளாரில் 148, மருதாநதியில் 40, சோத்துப்பாறையில் 8, போடியில் 11 மி.மீ., மழை அளவு பதிவாகியிருந்தது.

÷அணை நீர்மட்டம்: பெரியாறு அணை நீர் மட்டம் சனிக்கிழமை 118.40 அடியாக இருந்தது. அணைக்கான நீர் வரத்து விநாடிக்கு 625 கன அடி. அணையில் இருந்து தண்ணீர் திறப்பு இல்லை. அணையில் தண்ணீர் இருப்பு 2,443 மில்லியன் கன அடி.

÷வைகை அணை நீர் மட்டம் 53.22 அடியாக இருந்தது. அணைக்கு தண்ணீர் வரத்து விநாடிக்கு 35 கன அடியாக இருந்தது. அணையில் இருந்து விநாடிக்கு 60 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. அணையில் தண்ணீர் இருப்பு 2,339 மில்லியன் கன அடி.

**போடியில் பரவலாக மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

First Published : 24 Apr 2011 12:04:27 PM IST

போடி, ஏப். 23:÷போடி பகுதியில் பரவலாக மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

÷போடி பகுதியில் கடந்த ஒரு வாரமாக வெயில் அதிகமாக இருந்தது. இதனால் பொதுமக்கள் மட்டுமின்றி விவசாயிகள் பெரும் சிரமத்துக்கு ஆளாகியிருந்தனர். பல பகுதிகளில் போதிய நீரின்றி, சாகுபடி செய்யப்பட்டிருந்த பயிர்கள் கருகும் நிலை இருந்தது.

÷கடந்த 2 நாள்களாக பரவலாக சாரல் மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இக் கோடை மழை தொடர்ந்து நீடிக்குமானால், பயிர்களை காப்பாற்றி விடலாம் என்ற நம்பிக்கையுடன் உள்ளனர். ÷போடி கொட்டகுடி ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. மா மற்றும் ஏலத் தோட்டங்களில் இம் மழையால் காய்கள் நன்கு வளர்வதற்கு வாய்ப்பு உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**குமரியில் மழை நீடிப்பு: அணைகள் நீர்மட்டம் உயர்வு**

First Published : 24 Apr 2011 02:17:48 PM IST

நாகர்கோவில், ஏப்.23: கன்னியாகுமரி மாவட்டத்தில் அணைப் பகுதிகளிலும் பிற இடங்களிலும் பரவலாக சனிக்கிழமை மழை நீடித்தது.

காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக நாகர்கோவிலில் 84.2 மி.மீ. மழை பெய்தது.

மாவட்டத்திலுள்ள அணைப் பகுதிகளிலும், பிறபகுதிகளிலும் பெய்த மழையளவு (மி.மீட்டரில்): பேச்சிப்பாறை- 35.2, பெருஞ்சாணி- 32.4, சிற்றாறு 1- 42, சிற்றாறு 2- 38, நிலப்பாறை- 23.2, இரணியல்- 12.6, ஆனைக்கிடங்கு- 58, குளச்சல்- 4.8, குருந்தன்கோடு- 13.8, அடையாமடை- 23, கோழிப்போர்விளை- 8, புத்தன்அணை- 32, பூதப்பாண்டி- 20.2, சுருளோடு- 2.2, கன்னிமார்- 18.5, ஆரல்வாய்மொழி- 2, மயிலாடி- 50.2.

அணைப் பகுதிகளில் தொடர் மழையால் நீர்வரத்து அதிகரித்துள்ளது. பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 554 கன அடியும், பெருஞ்சாணி அணைக்கு 115 கன அடியும், சிற்றாறு 1 அணைக்கு 26 கன அடியும், சிற்றாறு 2 அணைக்கு வினாடிக்கு 45 கன அடியும் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. நீர்வரத்து அதிகரித்துள்ளதை அடுத்து அணைகளின் நீர்மட்டமும் அதிகரித்து வருகிறது.

வெள்ளிக்கிழமை 39.75 அடியாக இருந்த பேச்சிப்பாறை நீர்மட்டம் சனிக்கிழமை 40 அடியாக உயர்ந்திருந்தது. இதுபோல பெருஞ்சாணி நீர்மட்டம் 49.10 அடியிலிருந்து 49.30 அடியாகவும், சிற்றாறு 1 நீர்மட்டம் 8.53 அடியிலிருந்து 8.65 அடியாகவும், சிற்றாறு 2 நீர்மட்டம் 8.62 அடியிலிருந்து 8.76 அடியாகவும் உயர்ந்திருந்தது.

நாகர்கோவில் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் சனிக்கிழமை காலையில் சாரல் மழை பெய்தது.

**இயற்கை வேளாண்மை சான்றிதழ் படிப்பு தொடக்கம்**

First Published : 24 Apr 2011 12:40:29 PM IST

கரூர், ஏப். 23: கடவூர் வானகத்தில் இயற்கை வழி வேளாண் சான்றிதழ் படிப்பு அண்மையில் தொடங்கப்பட்டது.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் தொழில் முனைவோர் சுயவேலை மேம்பாட்டு நிறுவனத்தின் கரூர் மாவட்ட வழிகாட்டி வேலைவாய்ப்பு மையமாக அருள்பெருஞ்சோதி கல்வி அறக்கட்டளை செயல்பட்டுகிறது.

இந்த அறக்கட்டளை மூலமாக கோடை விடுமுறையை முன்னிட்டு, இளையோருக்கான இயற்கை வழி வேளாண் பயிற்சி வகுப்பு அண்மையில் தொடங்கப்பட்டது.

இதில் பங்கேற்ற மாணவ, மாணவிகளுக்கு கடவூர் வானகத்திலுள்ள இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வாரின் தோட்டத்தில் பயிற்சியளிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சியில் செடி, கொடி, மர வகைத் தாவரங்களை நட்டு வளர்க்கும் விதம், குறைந்த நீரில் வளர்க்கும் தொழில்நுட்பம், வெயில் தாக்காமலிருக்க நீர் ஆவியாவதைத் தடுக்க மூடாக்கு இடுதல், இடம் மாறிக் கிடக்கும் வளங்களை உரிய இடத்தில் சேர்த்து மண்ணை வளப்படுத்துதல், பயிர் ஊக்கிகள், பூச்சி விரட்டிகள், இயற்கை வேளாண் அறிஞர்கள், பண்டையத் தமிழரின் வேளாண் நுணுக்கள், ரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லிகளால் விளைந்துள்ள தீமைகள், மரபணு மாற்றுப் பயிர்கள் குறித்து விளக்கப்பட்டது.

வருகிற மே. 15-ம் இதுபோல மேலும் ஒரு பயிற்சி நடைபெறவுள்ளதாகவும், இதில் ஆர்வமுள்ளவர்கள் பங்கேற்கலாம் என்றும் அறக்கட்டளை ஒருங்கிணைப்பாளர் குமரநித்தியானந்தஜோதி தெரிவித்துள்ளார்.

பருத்தி, நூலிழை விலை சரிவு; துணி விலையும் குறைந்தது:ஜவுளி உற்பத்தியாளர்கள் அவசர ஆலோசனை

ஏப்ரல் 25,2011,03:45



திருப்பூர்:விசைத்தறி ஜவுளி உற்பத்திக்கு பயன்படும் நூலிழை ரகங்கள் விலை, திடீரென பெருமளவு குறைந்துள் ளது. இதனால், துணி ரகங்களின் விலையிலும் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது.திருப்பூர் மற்றும் கோவை மாவட்டங்களில், இரண்டு லட்சம் விசைத்தறிகள் உள்ளன. இவற்றின் மூலம், தினமும் ஏறத்தாழ ஒரு கோடி மீட்டர் அளவு, காடா துணி ரகங்கள் உற்பத்தியாகின்றன. இவை, பல்வேறு வட மாநிலங்களுக்கும், சில வெளிநாடு களுக் கும் செல்கின்றன.இந்த உற்பத்திக்கு தேவையான மூலப்பொருளான நூலிழை ரகங்கள், கோவை, திருப்பூர், மதுரை, திண்டுக்கல், திருநெல்வேலி, ஈரோடு, சேலம் மாவட்டங்களில் உள்ள நூற்பாலை களிலிருந்தும், மகாராஷ் டிரா, மத்தியப் பிரதேசம் உள்ளிட்ட சில வட மாநிலங்களில் இருந்தும் கொண்டு வரப்படுகின்றன. ஏற்று மதி உள்ளிட்ட காரணங்களால், பருத்தி விலை அதிகரித்த வண்ணம் இருந்தது. எனவே, பருத்தி ஏற்றுமதியை கட்டுப்படுத்த வேண்டும் என்ற தொழிற்துறையினரின் கோரிக்கையை அடுத்து, மத்திய அரசு சில நடவடிக்கை களை மேற்கொண்டது; விலையும் சற்று கட்டுக்குள் இருந்தது.இந்நிலையில், கடந்த இரண்டு நாள்களில், பருத்தி ரகங்களின் விலை, திடீரென குறைந்து விட்டது. இதன் தொடர்ச்சியாக, நூலிழை ரகங்களின் விலையும் குறைந்தது; விசைத்தறியில் உற்பத்தியாகும் துணி ரகங்களின் விலையும், கடுமையாக குறைந்து விட்டது. இது, நூற்பாலைகள் மற்றும் ஜவுளி உற்பத்தியாளர்கள் என, இரு தரப்புக்கும், பெரும் அதிர்ச்சியையும், அதிக இழப்பையும் ஏற்படுத்துவதாக உள்ளது. இதனால், தொழில் துறையினர் பெரும் கலக்கம் அடைந்துள்ளனர்.பருத்தி விலை மாற்றம்: முந்தைய வாரத்துடன் ஒப்பிடுகையில், கடந்த இரண்டு நாள்களில், பருத்தி ரகங்கள் 7,000 முதல் 9,000 ரூபாய் வரை, விலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. 40 ரகம் வெப்ட் மற்றும் 30 ரகம் வார்ப் நூலிழை

உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும், 28 எம்.எம்., ரக பருத்தி, 356 கிலோ எடையுள்ள ஒரு கேண்டி, கடந்த வாரம் 60 ஆயிரம் முதல் 61 ஆயிரம் ரூபாய் வரை விலை இருந்தது.கடந்த இரண்டு நாள்களில், இதன் விலை 53 ஆயிரம் முதல் 54 ஆயிரம் வரை, ஏறத்தாழ 7,000 ரூபாய் விலை குறைந்துள்ளது. அதேபோல், 40 ரகம் வார்ப் மற்றும் 60 ரகம் வெப்ட் நூலிழை உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் 30 எம்.எம்., ரக பருத்தி, 63 ஆயிரம் முதல் 64 ஆயிரம் வரை விலை இருந்தது, தற்போது 55 ஆயிரம் முதல் 57 ஆயிரம் ரூபாய்வரை விலை குறைந்துள்ளது.'அரசியல் காரணங்களால் இந்த விலை மாற்றம் ஏற்பட்டிருக்கலாம்' என, தொழில் துறையினர் எண்ணுகின்றனர். 'இக்காரணத்தை காட்டி பஞ்சு ஏற்றுமதி செய்யவும் சிலர் திட்டமிட்டிருக்கலாம்' என்ற சந்தேகமும் தொழில் துறையினருக்கு ஏற்பட்டுள்ளது.நூலிழை விலையில் மாற்றம்: பருத்தி விலையில் ஓரிரு நாளில் ஏற்பட்டுள்ள பெரும் சரிவு, விசைத்தறி ஜவுளி உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் அனைத்து ரக நூலிழை விலைகளிலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஓ.இ., மில்களில் உற்பத்தியாகும் 20 ரகம் நூலிழை, இந்த வாரத் துவக்கத்தில் ஒரு மூட்டை 7,900 முதல் 8,000 ரூபாய் வரை விற்கப்பட்டது. இது, தற்போது 7,400 ரூபாயாக குறைந்துள்ளது.அதேபோல், 30 ரகம் வார்ப் நூலிழை, 50 கிலோ எடையுள்ள மூட்டை 12 ஆயிரத்தில் இருந்து 11 ஆயிரம் ரூபாயாக மூட்டைக்கு 1,000 ரூபாய் குறைந்துள்ளது. 40 ரகம் வெப்ட் நூலிழை 11 ஆயிரத்து 700 ரிலிருந்து 10 ஆயிரத்து 600 ரூபாயா கவும், 40 ரகம் வார்ப் நூலிழை 12 ஆயிரத்து 500ல் இருந்து 11 ஆயிரத்து 500 ரூபாயாகவும் குறைந்து விட்டது. இவை அனைத்தையும் விட, 60 ரகம் வெப்ட் நூலிழை மூட்டைக்கு 2,000 ரூபாய் குறைந்துள்ளது. ஒரு மூட்டை 13 ஆயிரத்து 500 ரூபாயில் இருந்த இதன் விலை, தற்போது 11 ஆயிரத்து 500 ரூபாயாக மாறியுள்ளது. பொதுவாக, ஜவுளி உற்பத்தியாளர்கள் தங்களின் உற்பத்தித்திறனுக்கு ஏற்ப, குறைந்தபட்சம் இரண்டு வார அளவுக்கு தேவையான நூலிழை ரகங்களை இருப்பில் வைத்திருப்பர். அதற்கேற்ப, உற்பத்தியாகும் துணி ரகங்களுக்கு விற்பனை விலை நிர்ணயம் செய்யப்படும். ஆனால், துணியை வாங்கும் வியாபாரிகளோ, கொள் முதல் செய்யும் போது உள்ள நூலிழை விலைக்கு ஏற்ற அளவில் தான் விலை நிர்ணயம் செய்கின்றனர். இவ் வகையில் தற்போது நூலிழை விலையில் ஏற்பட்டுள்ள சரிவால், துணி ரகங்களின் விலை பெருமளவு குறைந் துள்ளது. மீட்டர் ஒன்றுக்கு 36 ரூபாய்க்கு விற்ற துணி, தற்போது 32 ரூபாயாகவும், 31 ரூபாய்க்கு விற்பனை செய்த ரகம் 29 ரூபாயாக வும், 32.75 ரூபாய்க்கு விற்ற ரகம் 29.25 ரூபாய் எனவும், மீட்டர் ஒன்றுக்கு ரக வாரியாக இவற் றின் விலை, 3 முதல் 4 ரூபாய் வரை மிகவும் குறைந்துள்ளது.ஆலோசனை கூட்டம்: பருத்தி, நூலிழை மற்றும் துணி ரகங்களின் விலை குறைவால், ஜவுளி உற்பத்தியாளர்கள் பரிதவிப்புக்கு உள்ளாகி யுள்ளனர். இதுகுறித்து விவாதிப்பதற்கு, வரும் 25ம் தேதி, சோமனூரில் அனைத்து ஜவுளி உற்பத்தி யாளர்கள் சங்க கூட்டமைப்பு சார்பில், அவசர ஆலோசனை கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

**சென்னையை கலக்கும் சிந்தாதிரிப்பேட்டை மீன் வர்த்தகம்**

ஏப்ரல் 25,2011,03:43



சென்னையில், ஜவுளி, தங்க நகைகள் வர்த்தகத்திற்கு, தி.நகர் எப்படி பிரசித்தி பெற்றதோ, அப்படி மீன் வியாபாரத்திற்கு, சிந்தாதிரிப்பேட்டை புகழ் பெற்று விளங்கி வருகிறது.புதிய தலைமை செயலகம் அருகே அமைந் துள்ள சிந்தாதிரிப்பேட்டை பகுதி, மீன் வர்த்தகம் மற்றும் கேரம் விளையாட்டுக்கு பெயர் பெற்ற இடம். இங்கு, மீன் உள்ளிட்ட கடல் உணவு பொருள்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்கப்படுகின்றன. மீன், இறால், நண்டு உள்ளிட்டவற்றின் பிரதான ஏற்றுமதி மையமாகவும் சிந்தாதிரிப்பேட்டை திகழ்கிறது.இங்கு, மார்க்கெட் வியாபாரம் மற்றும் ஏற்றுமதி என, இரண்டு வகையில், கடல் உணவு பொருள்கள் வர்த்தகம் நடக்கிறது. மீன் மார்க்கெட் ஐந்து கிரவுண்டு பரப்பில் அமைந்துள்ளது. தனியாருக்கு சொந்தமான இந்த இடத்தில், 160 ஆண்டு களுக்கும் மேலாக மீன் வியாபாரம் நடந்து வருகிறது. கூரை கட்டடத்தில், செயல்பட்ட இந்த மார்க்கெட், 15 ஆண்டுகளுக்கு முன் சீரமைக்கப்பட்டு, புதிதாக கட்டப்பட்டது.இந்த மார்க்கெட்டில், மீன் உள்ளிட்ட கடல் உணவு பொருள்களின் மொத்த வியாபாரத்தில், 19 பேர் ஈடுபடுகின்றனர். சில்லறை வியாபரத்தில், 300க்கும் மேற்பட் டவர்கள் உள்ளனர். இவர்களிடமிருந்து, சிறிய மீன் வியாபாரிகள், மீன்களை வாங்கி தங்கள் பகுதியில் விற்பனை செய்து வருகின்றனர்.தினந்தோறும், மொத்த வியாபாரம் காலை 4 மணியளவில் துவங்கி, 10 மணிக்கு முடிவடை கிறது. இதனுடன், சில்லறை வியாபாரமும் 6 மணியளவில் துவங்கி, நண்பகல் வரை நடக்கிறது.மீன் மார்க்கெட் டிற்கு, ஆந்திரா, மும்பை, கோல்கட்டா, ஒடிசா, குஜராத், கேரளா உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதி களிலிருந்து, ரயில் மற்றும் லாரிகள் மூலம் மீன்கள் கொண்டு வரப்படுகின்றன. இங்கிருந்து, சென்னை முழுவதும் உள்ள சந்தைகளுக்கும், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திண்டிவனம் உள்ளிட்ட தமிழகத்தின் வட மாவட்டங் களுக்கும், விற்பனைக்காக மீன்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன.வஞ்சிரம் (மவுலாசி), சின்ன வஞ்சிரம், வவ்வால், கொடுவா, சுறா, சங்கரா, கட்லா, ரோகு, மிர்கால், கெலித்தி, கானாங்கத்தை,

கவளை, மத்தி, கரி மீன் உள்ளிட்ட மீன் வகைகளும், வெள்ளை இறால், கார இறால், விநாமி மற்றும் பொடி இறால் உள்ளிட்ட இறால் வகைகளும் அதிகளவில் விற்பனை செய்யப்படுகின்றன. இவை தவிர, கடல் நண்டு, உயிர் நண்டு, கடம்பா (கட மான்), கட்லி பீஸ் உள்ளிட்ட கடல் உணவு பொருள்களும் விற்பனை செய்யப்படுகின்றன.வேறு எந்த சந்தையிலும் கிடைக்காத, கடல் உணவு பொருள்கள் சிந்தாதிரிப்பேட்டையில் கிடைப்பதால், நகரின் பல்வேறு பகுதிகளி லிருந்தும், மக்கள் திரளாக வந்து, விருப்பமான மீன்களை வாங்கி செல்கின்றனர். இதனால், காலை வேளையில், மக்கள் நெருக்கடியால், மார்க்கெட் திணறி வருகிறது. மேலும், இக்கூட்டத்தை சமாளிக்கும் அளவிற்கு, போதிய இடவசதி இல்லாததால், மக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர்.மேலும், மீன்களை பதப்படுத்தும், ஐஸ் கட்டிகளிலிருந்து வழியும் அசுத்த நீரும், மீன்களை சுத்தப்படுத்தும் போது வெளியாகும் கழிவு நீரும், சுகாதார சீர்கேட்டிற்கு வழிவகுப்பதாக உள்ளது. இத்துடன் மார்க்கெட்டில், ஆங்காங்கே பாதையை அடைத்து கொண்டு, குறு வியா பாரிகள் கடை போடுவதும், மீன்களை வெட்டுவதும், மக்களை மிகுந்த அவதிக்குள்ளாக்குவதாக பொதுமக்கள் கூறுகின்றனர்.இந்த மீன் மார்க்கெட், மீன் வெட்டுதல், இறால் தோல் உறித்தல், கணக்கு எழுதுதல், சுத்தம் செய்தல், சரக்குகளை எடுத்து செல்லுதல் என, 1,000க்கும் மேற்பட்டவர் களுக்கு நேரடி வேலைவாய்ப்பை வழங்குகிறது. இது தவிர, பல்லாயிரம் பேருக்கு, மறைமுக வேலைவாய்ப்பை யும் அளித்து வருகிறது.மீன் விற்பனையை போல், மீன் உள்ளிட்ட கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதியிலும் சிந்தாதிரிப்பேட்டை சிறப்பான இடத்தில் உள்ளது. இங்கு 70க்கும் மேற்பட்ட வர்த்தகர்கள், மீன் ஏற்றுமதியில் ஈடுபடுகின்றனர்.இவர்களுக்கு சொந்தமாக உள்ள நிலை யங்களில், ஏற்றுமதி மற்றும் உள்ளூர் விற்பனைக்கான, கடல் உணவு பொருள்கள் பதப்படுத்தி வைக்கப்ப டுகின் றன. ஆந்திரா, தூத்துக்குடி, கன்னியாகுமரி, விசாகப்பட்டினம், ஒடிசா,மும்பை ஆகிய இடங்களி லிருந்து, மீன் உள்ளிட்ட கடல் உணவு பொருள்கள், இந்த பதப்படுத்தும் நிலையங்களுக்கு கொண்டு வரப்பட்டு, தரம் வாரியாக பிரிக்கப்படுகிறது. பின்னர், தைவான், ஹாங்காங், துபாய், குவைத் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.இங்கிருந்து, உயிருள்ள மீன்கள், ஐஸ் மீன்கள் மற்றும் பக்குவப்படுத்தப்பட்ட மீன்கள் என, மூன்று வகைகளில் ஏற்றுமதி மேற்கொள்ளப்படுகிறது. ஐரோப்பிய நாடுகளுக்கு, பக்குவப்படுத்தப்பட்ட மீன் வகைகள் அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

சிங்கப்பூர், ஹாங்காங் உள்ளிட்ட நாடுகளுக்கு உயிருள்ள மீன் வகைகளும், மற்ற நாடுகளுக்கு, ஐஸ் வகை மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.ஏற்றுமதி செய்யக் கூடிய கடல் உணவு பொருள்களை பரிசோதித்து, சான்றிதழ் அளிக்கும் பொறுப்பை தாளமுத்து நடராஜர் மாளிகையில் செயல்படும், ஏற்றுமதி கண்காணிப்பு அமைப்பு மேற்கொண்டு வருகிறது.இந்த அமைப்பில் பணிபுரியும் உயரதிகாரிகள் சிலர், குறிப்பிட்ட ஒரு நிறுவனத்திற்கு மட்டுமே ஏற்றுமதிக்கான அனுமதியை வழங்கி வருவதாக, பாதிக்கப்பட்டவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். அரசு, இதில்

தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளனர். அவ்வாறு தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டால், இங்கிருந்து மேலும் அதிகளவில் ஏற்றுமதி செய்ய முடியும்.

சிந்தாதிரிப்பேட்டை மீன் மார்க்கெட்டில், நாள்தோறும், 15 முதல் 20 டன் வரை கடல் உணவு பொருள்கள் விற்பனையாகின்றன. புதன் மற்றும் ஞாயிற்றுக்கிழமையில், இந்த விற்பனை பல மடங்கு உயரும். இந்த வகையில், நாள் ஒன்றுக்கு 30 முதல் 40 லட்சம் ரூபாய் வரை, இங்கு வர்த்தகம் நடைபெறுகிறது.

நாள் ஒன்றுக்கு, வரும் 20 டன் மீன் வகைகளில், 80 சதவீத அளவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மீதமுள்ள மீன் வகைகள் நட்சத்திர ஓட்டல்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இந்த வகையில், நாள் ஒன்றுக்கு இரண்டு கோடி ரூபாய் மதிப்பிற்கு இங்கு வர்த்தகம் நடைபெறுகிறது. வீ. அரிகரசுதன்

**"ஹோலியாஸ்' சாகுபடியில் விவசாயிகள்... ஆர்வம் மானிய உதவி கிடைக்காமல் பரிதவிப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 25,2011,01:10 IST

கள்ளக்குறிச்சி : கள்ளக்குறிச்சி பகுதியில் மருத்துவக் குணமிக்க "ஹோலியாஸ்' கிழங்கு சாகுபடி செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டத் துவங்கியுள்ளனர். சாகுபடியை அதிகரிக்க அரசு மானியம் வழங்கு வதோடு, இன்சூரன்ஸ் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். மருத்துவக் குணம் மிகுந்த விவசாய பயிரான "ஹோலியாஸ்' சாகுபடிசெய்வதில் சமீப காலமாக விவசாயிகள் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர். காடுகள் மற்றும் மலைகளில் வாழ்ந்த சித்தர்கள் "ஹோலியாஸ்' கிழங்கை பயன்படுத்தி பல நோய்களை குணப்படுத்தியதோடு, உணவாகவும் பயன்படுத்தி வந்துள்ளனர். மலைப் பகுதிகளில் இக்கிழங்குகள் அழிந்ததாலும், மருத்துவம் மற்றும் அழகுசாதன பொருட்கள் தயாரிப்பில் அதிக தேவை ஏற்பட்டுள்ளதால் தற்போது "ஹோலியாஸ்' பயிர் சாகுபடியை அதிகரிக்க பல மருத்துவ நிறுவனங்கள் விவசாயிகளை ஊக்குவிக்கின்றன. விழுப்புரம் மாவட்டத்தில் கள் ளக்குறிச்சி, சங்கராபுரம், சின்னசேலம் மற்றும் சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் உட்பட பல இடங்களில் சுமார் 5000 ஏக்கருக்கு மேல் நடவு செய்துள்ளனர். வடிகால் வசதி உள்ள செம்மண், சரளை மண் நிலங் கள் "ஹோலியாஸ்' சாகுபடிக்கு சிறந்தவையாக கருதப்படுகிறது. களி மண் மற்றும் கலர் மண் நிலங்களில் இந்த வகை பயிர் சாகுபடி செய்ய முடியாது. நன்கு உழவு செய்த நிலங்களில் பார் அமைத்து ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் "ஹோலியாஸ்' செடி துணுக்கு களை அரை அடி நீளம் வரை துண்டு செய்து வல்லி கொடிகள் போல் நடவு செய்கின்றனர். 6 மாதங்களுக்கு தண்ணீர் பாய்ச்சி, களை நீக்கி, உரமிட்டு நன்கு

வளர்ந்த "ஹோலியாஸ்' கிழங்குகளை மார்ச் அல்லது ஏப்ரல் மாதங்களில் அறுவடை செய்கின்றனர். "ஹோலியாஸ்' கிழங்குகள் ஏக்கருக்கு 3 டன் முதல் 6 டன் வரை மகசூல் கிடைக்கிறது. இவற்றை விவசாயிகள் லாரிகளில் ஏற்றிச் சென்று அருகிலுள்ள தனியார் நிறுவனங்களிடம் ஒரு டன் 15,000 ரூபாய் வரை விற்கின்றனர். இவற்றை கொள்முதல் செய்யும் தனியார் நிறுவனங்களும் உடன் பணம் கொடுத்து விடுகின்றனர். மேலும் அறுவடையின் போது கிடைக்கும் "ஹோலியாஸ்' செடியின் அடி தண்டுகளும் ஒரு டன் 2,000 ரூபாய் வரை விலை கொடுத்து தனியார் நிறுவனங்களே வாங்கிக் கொள்கின்றன. கொள்முதல் செய்யும் "ஹோலியாஸ்' கிழங்குகளை "மிஷின்கள்' மூலம் சுத்தம் செய்கின்றனர். பின்னர் சிமென்ட் தளங்களில் பரப்பி வெயிலில் உலர வைத்து பெங்களூரூவில் உள்ள தனியார் நிறுவனங்களுக்கு அனுப்புகின்றனர். அங்கு "ஹோலியாஸ்' கிழங்குகளை சுத்தம் செய்து, அதிலிருந்து கண் அழுத்தத்தை தடுக்க உதவும் மருத்துவ குணமிக்க திரவத்தை தனியாக பிரித்தெடுக்கின்றனர். மேலும் அதிலிருந்து வாசனை திரவியங்கள், அழகு சாதனப் பொருட்கள் தயாரிக்கவும், உடல் பருமன் குறைக்கப் பயன்படும் பவுடர் போன்ற பொருளையும் தயார் செய்கின்றனர். பல பொருட்களாக பிரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதன் மூலம் அரசுக்கு பல்வேறு வரி விதிப்பு மூலம் அதிகளவு வருமானம் கிடைக்கிறது. ஒரு ஏக்கரில் ஹோலியாஸ் பயிர் செய்ய 20,000 முதல் 25,000 ரூபாய் வரை செலவாகிறது. ஆனால் ஏக்கருக்கு சராசரியாக 4 டன் விளைச்சல் கிடைத்தாலும் 60,000 ரூபாய் கிடைக்கிறது. இதில் நடவு மற்றும் அறுவடை செலவு போக ஏக்கருக்கு 40,000 ஆயிரம் ரூபாய் வரை விவசாயிகளுக்கு லாபம் கிடைப்பதால் விவசாயிகள் "ஹோலியாஸ்' கிழங்கு பயிர் செய்வதில் ஆர்வம் செலுத்துகின்றனர். இவ்வளவு சிறப்பு மிக்க, கை மேல் பயன் கொடுக்கக் கூடிய "ஹோலியாஸ்' சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அரசு சார்பில் கூடுதல் மானியம் மற்றும் விதை கருணைகளை வேளாண் துறை மூலம் வழங்க முன் வரவேண்டும். அதேபோல் இயற்கை சீற்றங்களால் பாதிப்பு ஏற்படும் போது விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படாத வகையில் இன்சூரன்ஸ் திட்டத்தையும் அரசு முழு பொறுப்பில் நடைமுறைப்படுத்த வேண்டும். மேலும் இந்திய சித்த மருத்துவ கழகத்தால் "ஹோலியாஸ்' சித்த மருத்துவ தாவ ரங்களில் ஒன்றாக அறிவித்துள்ளனர். இருப்பினும் தமிழக அரசு இதுவரை "ஹோலியாஸ்' தாவரத்தை சித்த மருத்துவப் பட்டியலில் கீழ் அறிவிக்காமல் உள்ளது. இதனால் இவற்றை கொள் முதல் செய்யும் போது வரி செலுத்தும் நிலை ள்ளது. எனவே அரசு மூலிகை தாவரங்களில் ஒன்றாக "ஹோலியாசை' தமிழக அரசு அறிவித்தால் கூடுதலாக 10 சதவீதம் லாபம் கிடைக்கவும் வாய்ப்பு உள்ளதாக விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**ரூ.78 லட்சத்துக்கு பருத்தி வர்த்தகம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 25,2011,00:23 IST

வெள்ளகோவில் : மூலனூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்த பருத்தி ஏலத்துக்கு, கடந்த வாரத்தைவிட 751 மூட்டை வரத்து அதிகரித்திருந்தது. திருச்சி, மணப்பாறை, கரூர் மற்றும் மூலனூர் சுற்றுப்பகுதிகளை சேர்ந்த விவசாயிகள், பருத்தியை ஏலத்துக்கு கொண்டு வந்தனர். கடந்த வாரம் 3,216 மூட்டையாக இருந்த வரத்து, இந்த வாரம் 3,967 மூட்டையாக அதிகரித்தது. ஆர்.சி.எச்., ரக பருத்தி மூட்டைக்கு அதிகபட்சம் ரூ.6,050; குறைந்தபட்சம் ரூ.5,700; டி.சி.எச்., பருத்தி அதிகபட்சம் 6,850; குறைந்தபட்சம் 6,500 ரூபாய் என விலை நிர்ணயம் செய்யப்பட்டது. அன்னூர், புஞ்சை புளியம்பட்டி, காங்கயம் பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் பருத்தி கொள்முதல் செய்தனர். ரூ.78 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது.

**ஏலத்தில் மஞ்சள் விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 25,2011,02:39 IST

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்தில், விலை உயர்ந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரம் தோறும் சனிக்கிழமையில் மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது. கடந்த மார்ச் மாதம் துவங்கிய மஞ்சள் ஏலத்தில், குவிண்டால், 12 ஆயிரத்து 600 ரூபாய்க்கு விற்றது. அடுத்தடுத்த வாரங்களில் நடந்த மஞ்சள் ஏலத்தில், மஞ்சள் விலை சரிவடைந்தது. கடந்த மார்ச் 26ம் தேதி நடந்த மஞ்சள் ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டால், 5,711 ரூபாய் முதல் 11 ஆயிரத்து 39 ரூபாயும், உருண்டை மஞ்சள் குவிண்டால், 5,219 ரூபாய் முதல் 9,761 ரூபாய் வரை விற்பனையானது. சராசரியாக, விரலி மற்றும் உருண்டை மஞ்சள், குவிண்டாலுக்கு 2,000 ரூபாய் வரை விலை குறைந்தது. அதன் காரணமாக, மஞ்சள் மூட்டைகளை விவசாயிகள் விற்பனை செய்யாமல் இருப்பு வைக்கத் துவங்கினர். இந்நிலையில், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், கடந்த மூன்று வாரங்களாக வெளி மாவட்ட வியாபாரிகள் கலந்து கொள்ளாததால், ஏலம் ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்துக்கு, 1,000 மஞ்சள் மூட்டைகளை, விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். அதில், விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்த பட்சமாக, 9,979 ரூபாயும், அதிகபட்சமாக 11 ஆயிரத்து 299 ரூபாயும், உருண்டை மஞ்சள் குறைந்த பட்சம், 7,879 ரூபாயும், அதிகபட்சம் 10 ஆயிரத்து 299 ரூபாயும், பனங்காலி மஞ்சள் குவிண்டால் குறைந்த பட்சம், 20 ஆயிரத்து 889 ரூபாயும், அதிகபட்சம், 22 ஆயிரத்து 999

ரூபாய்க்கும் விற்பனையானது.
அன்று நடந்த மஞ்சள் ஏலத்தில், 50 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது. கடந்த மூன்று வாரங்களாக மஞ்சள் ஏலம் ஒத்திவைக்கப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்தில் மஞ்சள் விலை உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**பாபநாசம் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 25,2011,02:01 IST

விக்கிரமசிங்கபுரம் : காரையார் வனப்பகுதியில் அவ்வப்போது மழை பெய்து வருவதால் பாபநாசம் அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளது. கோடை காலத்தை முன்னிட்டு பாபநாசம் அணைக்கு வரும் தண்ணீரின் அளவு வெகுவாக குறைந்தது. இந்நிலையில் கடந்த சுமார் 2 தினங்களாக காரையார் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் அவ்வப்போது மழை பெய்து வருவதால் வனப்குதிகளிலிருந்து அணைக்கு வரும் நீரின் அளவு சற்று அதிகரித்துள்ளது. நேற்று காலை நிலவரப்படி பாபநாசம் அணையின் நீர்மட்டம் 43.10 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 139.61 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 100 கனஅடி நீர் வெளியேறியது. அணைப்பகுதியில் 4 மி.மீ. மழையும், கீழணையில் 35 மி.மீ., சேர்வலார் அணையில் 40 மி.மீ.என்ற அளவில் மழை பதிவாகியுள்ளது. சேர்வலார் அணையின் நீர்மட்டம் நேற்று 56.66 அடியாக இருந்தது.

**பருத்தி ஏலம் ஒத்திவைப்பு விவசாயிகள் பெரும் கவலை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 25,2011,02:36 IST

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், பருத்தி ஏலம் இரண்டு வாரம் ஒத்திவைக்கப்பட்டதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், ஞாயிற்றுக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடந்து வருகிறது. இந்நிலையில், இங்கு நடந்த ஏலத்தில் பருத்தியை விலைக்கு வாங்கிய வெளிமாவட்ட வியாபாரிகள், சட்டசபை தேர்தலையொட்டி, பருத்தியை எடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. அதனால், கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில், பல லட்சம் ரூபாய் மதிப்பிலான பருத்தி மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. அதனால், போதிய இடம் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இடம் இல்லாததால், நேற்று நடக்க இருந்த பருத்தி ஏலம் திடீரென ஒத்தி வைக்கப்பட்டது. தொடர்ந்து, வரும் ஞாயிற்றுக்கிழமை தொழிலாளர் தினத்தையொட்டி அரசு விடுமுறை என்பதால், அன்றும் ஒத்தி வைக்கப்படுவதாக கூட்டுறவு

விற்பனை சங்க அலுவலர்கள் தெரிவித்தனர். பருத்தி விலை ஏறுமுகத்தை நோக்கிச் செல்லும் நிலையில், அடுத்தடுத்து இரு வாரங்கள் பருத்தி ஏலம் ஒத்திவைப்பதால், பருத்தி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**பலத்த மழையில் வரட்டுப்பள்ளம் அணை நிரம்பியது**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 25,2011,02:52 IST

அந்தியூர்: அந்தியூர் வரட்டுப்பள்ளம் அணை நீர் பிடிப்பு பகுதியில் இரண்டு நாட்களாக கனத்த மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக, அணை நிரம்பி மேற்கு கரையில் தண்ணீர் வழிந்தோடுகிறது. இதனால், மானாவாரியில் பயிர் செய்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அந்தியூர் வரட்டுப்பள்ளம் அணை 33.3 கன அடி கொள்ளளவு கொண்டது. கல்லுமடுவு, கும்பரவாணி பள்ளம், வரட்டுப்பள்ளம் ஆகிய நீர் பிடிப்பு பகுதியிலிருந்து வெளியேறும் தண்ணீரால் அணை நிரம்பும். சென்றாண்டு, நவம்பரில் தமிழகம் முழுவதும் வடகிழக்கு பருவ மழை வெளுத்து வாங்கியது. அணையின் நீர் பிடிப்பு பகுதியிலும் பெய்த கனத்த மழையால், இரு முறை நிரம்பி வழிந்தது.

நடப்பாண்டு, ஃபிப்ரவரியிலும் வரட்டுப்பள்ளம் அணை நீர் பிடிப்பு பகுதியில் பலத்த மழை பெய்ததால், மீண்டும் ஒரு முறை நிரம்பி சாதனை படைத்தது. பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதனடிப்படையில், 20 நாட்களுக்கு முன், அணையிலிருந்து ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. தண்ணீர் திறப்பின் காரணமாக, அணை நீர் மட்டம் 28 அடியாக குறைந்தது. அந்தியூர் சுற்று வட்டாரத்திலும், பர்கூர் மலைப் பகுதியிலும் இரு நாட்களாக மழை பெய்து வருகிறது. வரட்டுப்பள்ளம் அணையின் நீர் பிடிப்பு பகுதியிலும் விடிய விடிய பலத்த மழை பெய்தது. இதன் காரணமாக, நேற்று காலை முழு கொள்ளளவான 33.3 கன அடியை எட்டியது. அணையின் மேற்கு கரையிலிருந்து தண்ணீர் வெளியேறி வருகிறது. இதுமட்டுமின்றி, வனத்துக்குள் இருக்கும் குளங்களும் நிரம்பி வழிகிறது. அந்தியூர் பகுதியில் 100க்கணக்கான ஏக்கர் மானாவரி நிலத்தில் பயிர் செய்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இரு நாட்களாக பெய்த மழையால், கிணற்று பாசனத்தில் பயிர் செய்திருப்போருக்கும் தண்ணீர் பாய்ச்ச வேண்டிய வேலைப்பளு குறைந்துள்ளது.

விவசாயிகள் கூறியதாவது; இரு நாட்களாக அந்தியூர் வரட்டுப்பள்ளம் அணை நீர் பிடிப்பு பகுதியில் லேசானது முதல் கனத்த மழை பெய்தது. பரவலாக மழை பெய்துள்ளதால், மானாவரி விவசாய நிலத்தில் பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஏப்ரல் மாதத்தில் அணை

நிரம்பியுள்ளதால், நடப்பாண்டு முழுவதும் குடிநீருக்கும், விவசாய பாசனத்துக்கும் பிரச்னை இருக்காது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**கவலைப்பட வைக்கிறது கடலை புண்ணாக்கு நிமிர வைக்கும் நிலக்கடலை பருப்பு விலை**

ஏப்ரல் 24,2011,02:53



விருதுநகர்:விருதுநகர் மார்க்கெட்டில் நிலக்கடலை பருப்பு, கடலை புண்ணாக்கு விலை மூடைக்கு 100 ரூபா÷ உயர்ந்துள்ளது. ரவை மூடைக்கு 100 ரூபா÷ குறைந்துள்ளது.விருதுநகரில் சர்க்கரை விலை மூடைக்கு 2,795 ரூபாயாக உள்ளது. கடலெண்ணெ÷ டின்னுக்கு 1,230லிருந்து 1,310 ஆக உள்ளது. சூரியகாந்தி எண்ணெ÷ 1,170 ஆகவும், பாமாயில் 890 ரூபாயாகவும் உள்ளது. நிலக்கடலைப் பருப்பு4,000 லிருந்து 4,100 ரூபாயாக உயர்ந் துள்ளது, கடலைப் புண்ணாக்கு மூடை 2,700 லிருந்து 2,800 ரூபாயாக உயர்ந்துள்ளது. தாலோந்து உட்பட வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செ÷யும் நிலக்கடலை பருப்புக்கு நல்ல விலை கிடைப்பதால் உள்ளூர் சந்தையில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் இதன் விலை எட்டி பிடிக்க முடியாத அளவு உயர்ந்து வருகிறது.பருப்பு: உளுந்து விலை மூடைக்கு 4,900 லிருந்து 5,200 ரூபாயாகவும், சுமார் ரகம் 4,100 லிருந்து 4,200 வரையும், பர்மா பருவட்டு 5,200 ரூபாயாகவும் உள்ளது. நயம் உளுந்தம் பருப்பு 6,800 ஆகவும்,பர்மா பருவட்டு 5,250 ரூபாயா கவும் உள்ளது. துவரை 4,400 லிருந்து 4,800 ஆகவும், பொடி துவரை 3,800 ஆகவும், துவரம் பருப்பு 6,000 லிருந்து6,200 ரூபாயாகவுள்ளது. பொடி துவரம் பருப்பு 4,800 ஆகவும், பாசிப்பயறு 4,400 லிருந்து 4,300 ஆகவும், லயன் பருவட்டு 4,900 ஆகவும், சுமார் ரகம் 3,700 ரூபாயாகவும் உள்ளது.பாசிப்பருப்பு 6,200 ஆகவும், சுமார் ரகம் 5,600லிருந்து 5,900 ரூபாயாக உள்ளது.மைதா 2,180 ஆகவும், ரவை 2,260லிருந்து 2,160 ரூபாயாகவும் குறைந்துள்ளது. கொண்டைக்கடலை 2,700 ஆகவும், பொரிகடலை 2,100 லிருந்து 2,090 ரூபாயாகவும் குறைந் துள்ளது. மிளகா÷ வத்தல்: புது வத்தல் 8,200லிருந்து 8600 ஆகவும்,முண்டு வத்தல் 7,500லிருந்து

8,000 ரூபாயாகவும் உள்ளது. சோடை வத்தல் 3,000 ரூபாயாகவும், பழைய சோடை வத்தல் 2,500 ரூபாயாகவும் உள்ளது.

**கொப்பரை விலையில் மாற்றமில்லை விவசாயிகள் குஷியில் குறைவில்லை**

ஏப்ரல் 24,2011,10:08



பொள்ளாச்சி :தேங்காய் சீசன் துவங்கினாலும், விலை குறையாததால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். காங்கேயம் மார்க்கெட்டில், கடந்த 16ம் தேதி நிலவரப்படி, கொப்பரை, கிலோவுக்கு 63-64 ரூபாய் வரை விலை கிடைத்தது. தேங்காய் எண்ணெய், 15 லோ டின்னுக்கு 1,440, தேங்காய் பவுடர், கிலோவுக்கு 100 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டது. விவசாயிகள் பொறுப்பில் பறித்து உரித்த தேங்காய் (மட்டை தவிர), டன்னுக்கு 17 ஆயிரத்து 500 ரூபாய் முதல் 18 ஆயிரம் வரை விலை கிடைத்தது.பொள்ளாச்சி, உடுமலை தாலுகாக்களில் இருந்து, சென்னை உட்பட பல மாவட்டங்களுக்கு, உணவுத் தேவைக்காக அனுப்பும் தேங்காய், டன்னுக்கு 16 ஆயிரத்து 500 முதல் 17 ஆயிரம் வரையும், விவசாயிகள் பறித்து இருப்பு வைத்துள்ள தேங்காய், ஒன்றுக்கு 10.50 - 11.00 வரையும் விலை வழங்கப்பட்டது. நேற்றைய நிலவரப்படி, கொப்பரை, தேங்காய் எண்ணெய் விலையில், எந்த மாற்றமும் ஏற்படவில்லை. தேங்காய் பவுடர், கிலோவுக்கு 6 ரூபாய் உயர்ந்து, கிலோ 106 ரூபாய்க்கு விற்கப்பட்டது. தேங்காய் சீசன் காலத்திலும் விலை சரியாமல் இருப்பதால், விவசாயிகளும், கொப்பரை உற்பத்தியாளர்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.கொப்பரை உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் கூறுகையில், 'தேங்காய் வரத்து குறைவாக இருப்பதால், மார்க்கெட்டில் தேங்காய், கொப்பரைக்கு கிராக்கி நிலவுகிறது. மே மாதங்களில் தேங்காய் உற்பத்தி 10 சதவீதம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. தேவையும் அதிகமாக உள்ளதால், மார்க்கெட்டில், தேங்காய் சார்ந்த பொருட்களின் விலை, ஒரே நிலையாக உள்ளது' என்றனர்.

**தேயிலை உற்பத்தி அதிகரிப்பு**

ஏப்ரல் 24,2011,11:16



வால்பாறை : கோடை மழையால் வால்பாறையில் தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளது. வால்பாறை மலைப்பகுதியில் 80 சதவீதம் தேயிலையும், 15 சதவீதம் காபியும், 5 சதவீகிதத்தில் ஏலம், மிளகு போன்ற பயிர்களும் பயிரிடப்பட்டுள்ளன. வால்பாறையில் மட்டும் 47 தேயிலை எஸ்டேட்டுகளில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளன. எஸ்டேட் பகுதிகளில் கடந்த ஐந்து மாதமாக மழைப்பொழிவு முற்றிலுமாக குறைந்ததால் தேயிலை செடிக்கு தேவையான தண்ணீர் கிடைக்காமல் பல்வேறு எஸ்டேட் பகுதிகளில் தேயிலை செடிகள் கருகி போயின. இதனால் தேயிலை உற்பத்தி பாதிக்கப்பட்டதோடு, தற்காலிக தொழிலாளர்கள் வேலை இல்லாமல் அவதிப்பட்டனர். கடந்த பத்து நாட்களுக்கு மேலாக வால்பாறையை சுற்றியுள்ள பல்வேறு எஸ்டேட் பகுதிகளில் பரவலாக மழை பெய்துவருகிறது. இதனையடுத்து பட்டுப்போன தேயிலை செடிகள் அனைத்தும் மீண்டும் துளிர்விடத்துவங்கியுள் ளது. இதனால் தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளதோடு. தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பும் அதிகரித்துள்ளது. தேயிலை உற்பத்தி அதிகரிப்பால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தாலும், தொழிலாளர்கள் பற்றாக்குறையால் துளிர்விட்ட தேயிலையை முழுஅளவில் பறிக்க முடியாமல் எஸ்டேட் நிர்வாகங்கள் பரிதவிக்கின்றன.

**கடலில் மீன் பிடிக்க தடை முட்டை விலை உயர** வாய்ப்பு

ஏப்ரல் 24,2011,03:00



நாமக்கல்:'மீன் குஞ்சு உற்பத்தி காலம் என்பதால், கடலில் மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. அதன் கார ணமாக முட்டை விலை உயருவதற்கு வாய்ப்புள்ளது' என, கோழி பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர். நாமக்கல் மண்டலத்தில், 800க்கும் மேற்பட்ட கோழி பண்ணைகள் செயல்படுகின்றன. அதன் மூலம், நாளொன்றுக்கு, மூன்று கோடி முட்டைகள் உற்பத்தி செயேப்படுகின்றன. இந்த முட்டைகள், உள்ளூர் தேவைக்கும், பிற மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செயேப்படுகின்றன.மொத்த உற்பத்தியில், 80 லட்சம் முட்டைகள் கேரள மாநிலத்திற்கும், 80 லட்சம் முட்டைகள் தமிழகம் முழுவதும் உள்ளூர் விற்பனைக்கும், 70 லட்சம் முட்டைகள் சத் துணவு திட்டத்திற்கும் அனுப்பப்படுகின்றன. மீதமுள்ள, 70 லட்சம் முட்டைகள் வளைகுடா நாடுகளான குவைத், ஐக்கிய அரபு எமிரேட் நாடுகள், பக்ரைன், கத்தார், சவுதி அரேபியா, ஆப்ரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செயேப்படுகின்றன.அதில், வளைகுடா நாடுகளுக்கு, 40 லட்சம் முட்டைகள், ஆப்ரிக்கா கண்டத்தில் உள்ள நாடுகளுக்கு, 30 லட்சம் முட்டைகளும் ஏற்றுமதி செயேப்படுகின்றன. முட்டைக்கான தேவை, ஏற்றுமதி உள்ளிட்ட காரணங்களால் அவற்றின் உற்பத்தி நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.அவற்றுக்கு நிகராக பண்ணைகளில் கோழிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. அதன்படி, 2005-06ல், 3 கோடியே 7 லட்சம் கோழிகளும், 2006-07ல், 3 கோடியே 39 லட்சம் கோழிகளும், 2007-08ல், 3 கோடியே 67 லட்சம் கோழிகள் என, படிப்படியாக உயர்ந்து, 2010-11ல், நாமக்கல் மண்டலத்தில் உள்ள பண்ணைகளில், 4 கோடியே 48 லட்சம் முட்டைக் கோழிகள் உள்ளன.முட்டைக் கோழிகளின் எண்ணிக்கை மற்றும் முட்டை உற்பத்தி அதிக ரித்தபோதிலும், அவ்வப்போது முட்டை விலை சரிவை சந்திக்கும் நிலை ஏற்படுகிறது. இது கோழி பண்ணை யாளர்களை கவலையில் ஆழ்த்தியுள்ளது.ஏப்ரல் துவக்கம் முதல் முட்டை விலை சரிவடைந்துள்ளது. ஏப்ரல் 9ம் தேதி, 230 காசாக இருந்த முட்டை விலை, 5 காசுகள் குறைத்து, 225 காசாகவும், 11ம் தேதி, 15 காசுகள் குறைத்து, 210 காசாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அந்த விலை தொடர்ந்து நீடித்து வருகிறது.'முட்டை நுகர்வு பரவலாக குறைந்தது, முட்டை விலை சரிவுக்கு முக்கிய காரணம். தற்போது, கடலில் மீன் குஞ்சு உற்பத்தி காலம் என்பதால், மீன் பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இத்தடையின் காரணமாக, மீனுக்கு தட்டுப்பாடு ஏற்படும். எனவே, மீன் பிரியர்களின் பார்வை முட்டை, கோழி இறைச்சி பக்கம் திரும்ப வாய்ப்புள்ளது.'இது தவிர, கோடை வெப்பம் அதிகரிப்பு காரணமாக, முட்டை உற்பத்தி குறையும். அதனால் ஏற்படும் பற்றாக்குறையால், வரும் வாரங்களில் முட்டை விலை அதிகரிக்க வா÷ப்புள்ளது. அதுபோல், கோழி இறைச்சி விலையும் உயரும்' என, கோழி பண்ணை யாளர்கள் தெரிவிக்கின்றனர்.

**மழையால் சின்னவெங்காயம் அறுவடை பணிகள் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 24,2011,23:56 IST

உடுமலை : உடுமலை பகுதியில் பெய்து வரும் தொடர்மழையால் சின்னவெங்காய அறுவடை பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது.உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் கிணற்றுப்பாசனத்திற்கு பரவலாக சின்னவெங்காயம் பயிரிடப்படுகிறது. டிச., மாத இறுதியில் பயிரிடப்பட்ட சின்னவெங்காய சாகுபடியில் அறுவடை பணிகள் கடந்த வாரம் துவங்கியது. ஆட்கள் பற்றாக்குறையால் குறித்த நேரத்தில் அறுவடை பணிகள் முடிக்கப்படவில்லை. இந்நிலையில், உடுமலை பகுதியில் பெய்து வரும் தொடர்மழையால் சின்னவெங்காயம் அறுவடை பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது.விவசாயிகள் கூறியதாவது: சின்னவெங்காய சாகுபடியில் ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. ஆட்கள் பற்றாக்குறை, உரத்தட்டுப்பாடு, பூச்சிகொல்லி மருந்து விலை உயர்வு ஆகிய காரணங்களால் ஒவ்வொரு சீசனிலும் சாகுபடி செலவு உயர்ந்து வருகிறது. இந்நிலையில், பருவம் தவறி தற்போது பெய்து வரும் மழையால் நஷ்டம் ஏற்படும் நிலை உள்ளது.மழையில் நனைந்த வெங்காயத்தை இருப்பு வைக்க முடியாது. விளைநிலங்களில் இருந்து பிடுங்காத வெங்காயம் அதிக ஈரத்தால் அழுகி விடும். இந்த சீசனில் சின்னவெங்காயத்திற்கு நல்ல விலை இருந்தும் மழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளோம் என்றனர்.தப்பிக்குமா தக்காளி?கடந்த நவ., மாதம் பெய்த தொடர்மழையால் தக்காளி சாகுபடி பாதிக்கப்பட்டது. தொடர்மழை காரணமாக கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்ததால் ஜன., மாதம் முதல் பல ஆயிரம் ஏக்கரில் தக்காளி பயிரிடப்பட்டது. அதிக வரத்து காரணமாக கடந்த சில வாரங்களாக தக்காளியின் விலை கிலோ 5 ரூபாயாக குறைந்தது.தற்போது பெய்து வரும் தொடர்மழையால் காய்ப்பு தருணத்திலுள்ள தக்காளி செடியிலிருந்து பூக்கள் முற்றிலுமாக உதிர்ந்து விடும். இதனால், விளைச்சல் பல மடங்கு குறையும். விலை சரிவால் பாதிப்படைந்திருந்த தக்காளி சாகுபடி விவசாயிகளுக்கு மழையால் விளைச்சல் பாதிக்கப்பட்டு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

**தொடர்மழையால் விதை மஞ்சளுக்கு "கிராக்கி'**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 24,2011,00:51 IST

பொங்கலூர்:பொங்கலூர் பகுதியில் தொடர்ந்து மழை பெய்துவருவதால், விதை மஞ்சள் வாங்குவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். இதனால் விதை மஞ்சளுக்கு கிராக்கிஏற்பட்டுள்ளது.பொங்கலூர் பகுதியில் ஆண்டுதோறும் ஏராளமான விவசாயிகள் மஞ்சள் சாகுபடி செய்து வருகின்றனர். இந்தாண்டில் கடந்த மூன்று மாதங்களாக கடும் வெப்பம் நிலவியதால், நிலத்தடி நீர்மட்டம் வேகமாக குறைய துவங்கியது. காண்டூர் கால்வாயில் வேலை நடப்பதால், இந்தாண்டு பி.ஏ.பி., யில் பாசனத்துக்கு தண்ணீர் வரும் காலம் பாதியாக

குறைக்கப்படும் வாய்ப்பு உள்ளது. இதனால், தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் என்ற அச்சத்தில், பல விவசாயிகள் மஞ்சள் சாகுபடி செய்ய ஆர்வம் காட்டாமல் இருந்தனர்.தற்போது கடந்த நான்கு நாட்களாக தொடர்ந்து கனமழை பெய்து வருவதால் குளம், குட்டைகளுக்கு நீர் வரத்து துவங்கியுள்ளது; நிலத்தடி நீர் மட்டம்உயரும் வாய்ப்பு பிரகாசமடைந்துள்ளது. இதனால், மஞ்சள் சாகுபடி செய்ய விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.வரும் வைகாசி பட்டம் மஞ்சள் சாகுபடி சீசன் என்பதால், விதை மஞ்சள் கொள்முதல் செய்வதில் பல விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர். இதுவரை மந்தமாக இருந்த விதை மஞ்சள் விற்பனை சூடு பிடிக்க துவங்கியுள்ளது. ஒரு கிலோ விதை மஞ்சள் 30 ரூபாய் வரை விற்பனையாகிறது. இதனால் விதை மஞ்சள் இருப்பு வைத்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**மக்காச்சோளம் விலை உயர்வால் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 24,2011,00:51 IST

பொங்கலூர் :மக்காச்சோளம் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.பொங்கலூர் வட்டாரத்தில் வாவிபாளையம், காட்டூர், கொடுவாய், அவினாசிபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் மக்காச்சோளம் பெருமளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கோழி மற்றும் மாட்டுத் தீவனம் தயாரிக்க மக்காச்சோளம் அதிகளவில் கொள்முதல் செய்யப்படுகிறது. ஈமு மற்றும் கோழிப்பண்ணைகள் அதிகரித்து வருவதால், இதற்கான தேவை ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டே வருகிறது.பொங்கலூர் பகுதியில் மக்காச்சோளம் விளைவதற்கு தேவையான மண்வளம் மற்றும் இதன் வளர்ச்சிக்கு ஏற்ற சீதோஷ்ண நிலை நிலவுவதாலும் இப்பகுதி விவசாயிகள் மக்காச்சோளம் சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். இரு மாதங்களுக்கு முன் குவிண்டால் 800 ரூபாய்க்கு விற்பனையானது. தற்போது வெளியூர் வரத்து குறைந்துள்ளதாலும், தேவை அதிகரித்துள்ளதாலும் மக்காச்சோள விலை ஏறுமுகத்தில் உள்ளது. கடந்த சீசனை விட தற்போது குவிண்டாலுக்கு 450 ரூபாய் விலை உயர்ந்து, குவிண்டால் 1250 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு மக்காச்சோளம் சாகுபடி செய்திருந்த விவசாயிகளை மகிழ்ச்சியடைய செய்துள்ளது.

**எலுமிச்சை விலை எக்குத்தப்பாய் எகிறியது**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 24,2011,00:48 IST

திருப்பூர் : திருப்பூரில் நேற்று எலுமிச்சைபழம் விலை ஐந்து ரூபாயாக இருந்தது.கோடை துவங்கி விட்டால் குளிர்ச்சி தரும் பழங்களில் விலை மற்றும் விற்பனை அதிகரிக்கிறது. குளிர்ச்சி தரும்

எலுமிச்சை பழ விலை நேற்று அதிகபட்சமாக ஐந்து ரூபாய்க்கு விற்பனையானது.வியாபாரிகள் கூறியதாவது, ""எலுமிச்சைக்கு சீசன் கிடையாது; காய்க்கும் பருவத்தில் அதிக பழங்கள் இருந்தால் விற்பனைக்கு வரும். ஒவ்வொருவரும் குறைந்தளவில் வாங்கி செல்வதால், அதிக லாபம் எதிர்பார்த்து இப்பழங்களை விற்பனை செய்ய முடியாது. மார்ச் துவக்கத்தில் நல்ல வியாபாரம் இருந்தது. தற்போது, கோவில் விசேஷங்களுக்கும், ஜூஸ், லெமன் சாதம் போன்ற பயன்பாடுகளுக்கு அதிகளவில் எலுமிச்சை பழங்கள் வாங்கிச் செல்கின்றனர்". ""கடந்த வாரம் 2.50 ரூபாயாக இருந்த எலுமிச்சை பழம் விலை, இவ்வார துவக்கதில் நான்கு ரூபாயாக இருந்தது. அதிகபட்சமாக தற்போது ஒரு பழம் ஐந்து ரூபாய்க்கு விற்கிறது. பெரியது, சிறியது என இரு வகைகளில் விற்பனை செய்யப்படுகிறது," என்றனர்.

**எள் அறுவடையில் விவசாயிகள் தீவிரம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 24,2011,00:48 IST

பொங்கலூர் : பொங்கலூர் பகுதியில் எள் அறுவடையில் விவசாயிகள் தீவிரமாக உள்ளனர்.மூன்று மாதப் பயிரான எள், விதைத்த 90 நாட்களில் அறுவடைக்கு வருகிறது. பொங்கலூர் வட்டாரத்தில் கடந்த தை பட்டத்தில் கந்தாம்பாளையம், பெரியாரியபட்டி, அவிநாசி பாளையம், தாயம்பாளையம் உள்ளிட்ட இடங்களில் நூற்றுக் கணக்கான ஏக்கரில் எள் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. வெப்பமண்டலப் பயிரான எள் கடும் வறட்சியை தாங்கி வளரும் இயல்புடையது. இதற்கு குறைந்த நீர் இருந்தால் போதுமானது. பெரியளவில் பராமரிப்பு செய்ய வேண்டியதில்லை என்பதால், எள் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். பொங்கலூர் பகுதியில் கந்தாம்பாளையம், பெரியாரியபட்டி, அவிநாசிபாளையம், தாயம்பாளையம் பகுதிகளில் கடந்த தை பட்டத்தில் விதைத்த எள் தற்போது அறுவடைக்கு வந்துள்ளது.இப்பகுதியில் விளையும் எள் காங்கயம் மார்க்கெட் டில் விற்பனை செய்யப்படுகிறது. எள் கொள்முதல் செய்வதற்காக அப்பகுதியில் ஏராளமான தரகு கடைகள் செயல்படுகின்றன. தரகு கடைக்காரர்கள் விவசாயிகளிடம் கொள்முதல் செய்த எள்ளை ஆயில் மில்களுக்கும், மிட்டாய் தயாரிப்பாளர்களுக்கும் விற்பனைக் காக அனுப்புகின்றனர். தற்போது ஒரு கிலோ கருப்பு எள் 50 முதல் 60 ரூபாயாக உள்ளது.

**பருத்தி விலை சரிந்ததால் நூல் விலை குறைகிறது**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 24,2011,00:43 IST

திருப்பூர் : திருப்பூர் சாய பிரச்னையாலும், பனியன் ஆடைகளுக்கு கலால் வரி விதித்ததாலும், உற்பத்தி குறைந்து நூலிழைக்கான தேவை குறைந்து போயுள்ளது. இதன் விளைவாக பஞ்சு விலை குறைந்துள்ளதால், காட்டன் ஒசைரி நூல் விலை கிலோவுக்கு 20 ரூபாய் வரை குறையும்

வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.கடந்த ஆண்டுகளில் அதிகபட்சமாக, ஒரு கேண்டி( 356 கிலோ) பஞ்சு 23 ஆயிரம் ரூபாய்க்கு விற்றது, 63 ஆயிரமாக உயர்ந்தது. பருத்தி விலைக்கு போட்டியாக, நூல் விலையும் உயர்த்தப்பட்டது. மாறுபட்ட நூல் விலையால், உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிக்கான பின்னலாடை உற்பத்தி குறைந்தது. பனியன் தொழில் தள்ளாடிய நேரத்தில், திருப்பூரில் உள்ள சாயத்தொழிற்சாலைகள் மூடப்பட்டதால், 50 சதவீத உற்பத்தி பறிபோனது; கைக்கு வந்த ஆர்டர்களை ஏற்க முடியாமல் ஏற்றுமதியாளர்கள் தவித்தனர்.குறிப்பாக 2011ம் ஆண்டு துவக்கத்தில் இருந்து, பல்வேறு பிரச்னைகள் ஒன்றன் பின் ஒன்றாக, தொடர்கிறது. தொழிலை தக்க வைத்துக்கொள்ள போராட வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையில், உள்நாட்டு உற்பத்தியாளர்களை பாதிக்கும் வகையில், மத்திய அரசு 10 சதவீத கலால் வரி விதித்தது. இதனால், உள்நாட்டு பனியன் உற்பத்தியும் கடந்த ஒருமாதமாக குறைந்து போனது.இந்தியாவில் மட்டுமல்லாது, சர்வதேச அளவில் பருத்தி மற்றும் நூலிழைக்கான தேவை குறைந்துபோனது. குறிப்பாக நூல் விலை அபரிமிதமாக இருந்ததால், ஜவுளி உற்பத்தி தானாக குறைந்துவிட்டது. உற்பத்தியை குறைத்து கொண்டாலும், நூலை இருப்பு வைக்க முடியாத அளவுக்கு தேக்கம் ஏற்பட்டுள்ளது.கடந்த 2009ம் ஆண்டு ஆக., மாதம் ஒரு கேண்டி பஞ்சு 23 ஆயிரத்து 200 ரூபாயாக இருந்தது; நூல் விலை கிலோ 139 ரூபாயாக இருந்தது. டிச., மாதம் 25 ஆயிரத்து 700 ரூபாயாக உயர்ந்தது; நூல் 165 ரூபாயாக உயர்ந்தது. அடுத்தகட்டமாக, 2010ம் ஆண்டு மார்ச் மாதம், பஞ்சு விலை 28 ஆயிரம் ரூபாயானது.ஏப்., மாதம் 28 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்ந்தது; நூல் விலை 177 ரூபாயானது.மே மாத இறுதியில் 29 ஆயிரத்து 700 ஆக உயர்ந்து, அதிகபட்சமாக நூல் விலை 202 ஆக உயர்ந்தது. ஜூன் மாதத்தில் பஞ்சு விலை 1,300 ரூபாய் உயர்ந்திருந்தாலும், நூல் விலையில் 15 ரூபாய் குறைக்கப்பட்டது. ஆக., மாதத்தில் 33 ஆயிரத்து 200 ரூபாயாகவும், நூல் விலை 190 ஆகவும், செப்., மாதம் 39 ஆயிரமாகவும், நூல் விலை 197 ஆகவும், அக்.,மாதம் 37 ஆயிரம் ரூபாயாகவும், நூல் விலை 204 ரூபாயாகவும் இருந்தது.அக்., மாத இறுதியில், பஞ்சு விலை 40 ஆயிரத்து 600 ரூபாயாகவும், நூல் விலை 211 ரூபாயாகவும் இருந்தது; அதேமாதம் 26ம்தேதி 43 ஆயிரம் ரூபாயாகவும், நூல் விலை 218 ரூபாயாகவும் இருந்தது. நவ., மாதம் 1ம் தேதி 41 ஆயிரத்து 600 ரூபாயாகவும், நூல் விலை 225 ரூபாயாகவும், 10ம் தேதி அன்று பஞ்சு விலை 45 ஆயிரத்து 500 ஆகவும், நூல் விலை 240 ஆகவும் இருந்தது. பிப்., 7ம் தேதி பஞ்சு விலை 53 ஆயிரம் ரூபாயாகவும், நூல் விலை 260 ரூபாயாகவும், பிப்.,23ம் தேதி 58 ஆயிரத்து 500 ரூபாயாகவும், நூல் விலை 275 ரூபாயாகவும் இருந்தது.பின்னலாடை உற்பத்தியாளர்கள் கூறியதாவது:சாயத்தொழில் பிரச்னை, நூல் விலை உயர்வு, கலால் வரி, மின்வெட்டு என, பல்வேறு காரணங்களால் உற்பத்தி குறைந்துபோனது. இதனால், உற்பத்தியான நூலை வாங்க ஆளில்லை. இதனால், பஞ்சுக்கான தட்டுப்பாடும் குறைந்துள்ளது. கேண்டி 64 ஆயிரம் ரூபாயில் இருந்து, 54 ஆயிரமாக குறைந்து போயுள்ளது. இதனால், ஒரு கிலோ நூலில், 20 ரூபாய் முதல் 25 ரூபாய் வரை விலையை குறைக்க

வாய்ப்புள்ளது. கடந்த சில நாட்களாகவே, பெரும்பாலான நூற்பாலைகள், குறைந்த விலைக்கு நூல் வினியோகம் செய்கின்றன.கடந்த வாரம் வரை, கிலோ 241 ரூபாயாக இருந்த 20ம் நம்பர் நூல் 226ஆக குறைந்துள்ளது. அதேபோல், 250க்கு விற்ற 24ம் நம்பர் நூல் 235 ஆகவும், 262க்கு விற்ற 30ம் நம்பர் நூல் 246ஆகவும், 268க்கு விற்ற 34ம் நம்பர் நூல் 253ஆகவும், 275க்கு விற்ற 40ம் நம்பர் நூல் 260 ரூபாயாகவும் விலை குறைந்துள்ளது. பஞ்சு விலை குறைந்து வருவதால், மேலும் ஐந்து ரூபாய் விலை குறையும் என எதிர்பார்க்கிறோம். நெருக்கடியான சூழலில், யாரும் எதிர்பாராத வகையில் நூல் விலை குறைந்திருப்பது, பின்னலாடை உற்பத்தியாளர்களுக்கு ஆறுதல் அளிப்பதாக உள்ளது, என்றனர்.

**மல்லிகை விலை சரிவால் விவசாயிகள் வேதனை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 24,2011,02:35 IST

மதுரை:மதுரை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் இருந்து வரத்து அதிகரித்துள்ளதால், மல்லிகை விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. மதுரை, திண்டுக்கல், அருப்புக்கோட்டை, திருமங்கலம், உசிலம்பட்டி பகுதிகளில் மல்லிகை அதிகமாக சாகுபடி செய்யப்படுகிறது. தமிழகத்தின் மற்ற மாவட்டங்களை விட இப்பகுதியில் விளையும் மல்லிகை அளவில் பெரியதாகவும், அதிக மணத்துடனும் இருக்கும். இதனால் மதுரை மல்லிக்கு எப்போதுமே கிராக்கி உண்டு. ஆனால் சித்திரை திருவிழாவையொட்டி கிலோ 100 ரூபாயாக இருந்த மல்லிகை, கடந்த சில நாட்களாக கிலோ 40, 30ரூபாய் என சரிந்ததால், விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.கார்த்திகை, மார்கழியில் ஒரு ஏக்கருக்கு இரண்டு கிலோ, மூன்று கிலோ அளவில் தான் விளைச்சல் இருக்கும். அப்போது கிலோ 1000 ரூபாய் வரை விற்பனையாகும். எனவே விலை இருந்தாலும் விளைச்சல் இல்லாமல், விவசாயிகள் ஏமாற்றமடைவர். மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் விளைச்சல் அதிகரிப்பதால், காலை, மாலை இருவேளை பூப்பறிப்பர்.

காலையில் எடுக்கும் பூக்களை விரைவாக மார்க்கெட்டுக்கு கொண்டு வந்தால் ஓரளவு விலை கிடைக்கும். இதனால், விவசாயிகள் பல மைல் தூரம் பஸ்களிலும், இருசக்கர வாகனங்களிலும் பயணித்து மார்க்கெட் வருவர். இருந்தபோதும் கிலோ 40, 50ரூபாய்க்கே விற்கப்படுகிறது. தமிழகத்தில், கொடைரோடு, திண்டுக்கல், நிலக்கோட்டை, சேத்தூர், மதுரையில் சென்ட் பேக்டரிகள் உள்ளன. பூ வரத்து அதிகரிக்கும் சமயங்களில் இத்தொழிற்சாலைகள் கிலோ 30ரூபாய்க்கு வாங்குவதால், பறிப்பு கூலி கூட கிடைப்பதில்லை என வேதனையடைகின்றனர். விவசாயிகள் கூறியதாவது:ஆறுமுகம்(50) (நிலையூர்): நாற்பது வருடமாக பூ விவசாயம் செய்கிறேன். முன்பு 9 ஏக்கரில் மல்லிகை பயிர் செய்தேன். இப்போது இரண்டரை ஏக்கரில்

சாகுபடி செய்துள்ளேன். முன்புபோல தொழிலாளர்கள் கிடைப்பதில்லை. காலை 9 முதல் 12 மணி வரை பணியாற்ற ஒருஆளுக்கு 50ரூபாய் கூலி. பூ வரத்து அதிகரிக்கும்போது விலை வீழ்ந்துபோவதால், சென்ட் பேக்டரிக்கு குறைந்த விலைக்கு விற்கிறோம். இது பறிப்புக்கூலி, போக்குவரத்து செலவுக்கு போதுமானதாக இல்லை. இதனால், மல்லிகை விவசாயம் செய்யும் ஆர்வம் குறைந்து வருகிறது. செல்வம்(40) (சால்வார்பட்டி): ஒரு ஏக்கரில் மல்லிகை விவசாயம் செய்கிறேன். விலை கிடைக்கும் என அதிகாலையே மார்க்கெட்டுக்கு வந்தாலும் பயனில்லை. கிலோ 30 ரூபாய், 40 ரூபாய் போவதால், பறிப்பு கூலி கூட கொடுக்க முடியவில்லை. இந்நிலை மாற அரசு நிரந்தர விலை நிர்ணயம் செய்ய வேண்டும்.கண்ணன் (38) (எலியார்பத்தி): ஒன்றரை ஏக்கரில் மல்லிகை பயிரிட்டுள்ளேன். சித்திரை மாதத்தில் தான் மல்லிகை விளைச்சல் நன்றாக இருக்கும். ஆனால், அப்போது விலை கிடைக்காது. இதனால் விவசாய கடனைக் கூட அடைக்க முடிவதில்லை.

**தர்ப்பூசணிக்கு கிராக்கி**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 24,2011,00:24 IST

மானாமதுரை :கோடை காலத்தில் இதமளிக்கும் தர்ப்பூசணி, வெள்ளரி வரத்து குறைவால் விலை அதிகரித்துள்ளது. கோடையில் தர்ப்பூசணி, வெள்ளரி காய் விற்பனை களைகட்டும். இந்த ஆண்டு வரத்து குறைவால் விலை அதிகரித்துள்ளது. தர்ப்பூசணி முன்பு, கிலோ 8 ரூபாய்க்கு விற்றது. நடப்பு பருவத்தில் பூக்கள் கருகி, பிஞ்சுகளும் வெம்பி விட்டன. இதனால் எதிர்ப்பார்த்த விளைச்சல் இல்லை.உற்பத்தி செலவும் அதிகரித்து விட்டதால் தர்ப்பூசணி 10 ரூபாய்க்கு விற்கிறது.வியாபாரி பாண்டி கூறுகையில், ""திண்டுக்கல், பழனி, ஒட்டன்சத்திரம் பகுதிகளில் இருந்து பழங்கள் வரத்து குறைந்துள்ளது. மொத்த வியாபாரிகளிடம் போதுமான இருப்பு இல்லை," என்றார்.

**மழையில் கரும்புகள் வேருடன் சாய்ந்தது**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 24,2011,05:39 IST

கள்ளக்குறிச்சி:கள்ளக்குறிச்சி பகுதியில் பெய்த கனமழையில் கரும்புகள் வேருடன் சாய்ந்ததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.கள்ளக்குறிச்சி பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடியுடன் பலத்த மழை பெய்தது. சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்தும், ஓடை, கால்வாய்களில் தண்ணீர் ஓடியது. மழையின் போது காற்றும் பலமாக வீசியதால் கள்ளக்குறிச்சி அடுத்த தென்கீரனூர், தச்சூர் பகுதிகளில் பயிரிட்டிருந்த கரும்புகள் வேருடன் சாய்ந்தன.

அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் நீரில் மூழ்கின.சங்கராபுரம் பகுதியில் நேற்று முன் தினம் இரவு முழுவதும் இடியுடன் கன மழை பெய்ததால் மணிமுக்தா நதியில் வெள்ள பெருக்கு ஏற்பட்டது. சங்கராபுரம் அடுத்த தியாகராஜபுரத்தில் மின்னல் தாக்கியதால் டிரான்ஸ்பார்மர் சேதமடைந்து இரவு முழுவதும் மின்சாரம் இல்லாமல் மக்கள் பாதித்தனர்.

**கோடையிலும் குளிர்ந்தது கோவை! சிறுவாணி அணையின் நீர் மட்டம் உயர்வு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 24,2011,22:43 IST

கோவை : நான்கு நாட்களாக பெய்த கோடை மழையால் சிறுவாணி அணையின் நீர் மட்டம் சிறிது உயர்ந்துள்ளது.கோவையின் குடிநீர் ஆதாரமாக விளங்கும் சிறுவாணி அணையின் நீர் மட்டம் குறைந்ததை தொடர்ந்து, கோவை மாநகரில் குடிநீர் வினியோகம் கடுமையாக பாதிக்கப்பட்டது. மாநகராட்சி தெற்கு மற்றும் மேற்கு மண்டலத்துக்கு உட்பட்ட பகுதிகளில் மட்டுமே சிறுவாணி குடிநீர் வினியோகிக்கப்படுகிறது. மற்ற பகுதிகளுக்கு பில்லூர் குடிநீர் வினியோகிக்கப்படுகிறது. மாநகரின் குடிநீர் ஆதாரமாக விளங்கும் சிறுவாணி அணை யிலிருந்து அன்றாடம் 85 எம்.எல்.டி., தண்ணீர், ராட்சத மோட்டார் பம்ப் மூலம் உறிஞ்சி எடுக்கப்படுகிறது. அணையின் நீர் மட்டம் 878.5 மீட்டரில் இருந்து படிப்படியாக குறைந்து, நான்கு நாட்களாக 866.32 மீட் டராக இருந்து வருகிறது. அணையின் நீர் மட் டம் குறைந்து வருவதை உணர்ந்த மாநகராட்சி நிர்வாகம், தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருந்ததால், குடிநீர் வினியோகத்தில் எந்த மாற்றமும் கொண்டு வரவில்லை. தேர்தல் நிறைவடைந்த நிலையில், கடந்த வாரம் முதல் குடிநீர் வினியோகம் செய்யும் நாட்களை குறைத்தது. அதன்படி, இரு நாட்களுக்கொருமுறை இருந்த குடிநீர் வினி யோகம் தற்போது நான்கு நாட்களுக்கு ஒருமுறையாக மாற்றம் செய்யப்பட்டது. வினியோகத்தில் மாற்றம் செய்யப்பட்டாலும் அணையிலுள்ள தண்ணீரின் அளவுக்கு மே 15ம் தேதி வரையே மக்களுக்கு குடிநீர் வினியோகிக்க முடியும் என்கின்றனர் மாநகராட்சி அதிகாரிகள். நான்கு நாட்களுக்கொருமுறை குடிநீர் வினியோகம் என்றாலும், கோவையின் பெரும்பாலான பகுதிகளில் வாரம் ஒரு முறை மட்டுமே வினியோகம் செய்யப்படுகிறது. சிறுவாணி அணையின் தண்ணீர் இருப்பு நாளுக்கு நாள் குறைந்து வரும் நிலையில் கடந்த நான்கு நாட்களாக கோடை மழை பெய்து வருகிறது. சிறுவாணி அணை யின் நீர் பிடிப்பு பகுதியில் தொடர் மழை பெய்து வருகிறது. கடந்த நான்கு நாட்களில் மொத்தம் 40 மில்லி மீட்டர் மழையளவு பதிவாகியுள்ளது. இதனால் அணையின் நீர் மட்டம் 25 செ.மீ., உயர்ந்துள்ளது. இதுகுறித்து, மாநகராட்சி உதவி இன்ஜினியர் கதிர்வேல் (சிறுவாணி) கூறுகையில், ""எப்போதும் சிறுவாணி அணைக்கு பருவமழைதான் கை கொடுக்கும். தென் மேற்குப்பருவமழை ஜூன் மாதமே துவங்கும். அதற்கு முன்னதாக கோடை

மழை பெய்கிறது. தென்மேற்குப்பருவமழை ஜூன் மாதத்துக்கு முன்பு துவங்குவதற்கான வாய்ப்புகள் குறைவு என்று வானிலை மையம் கூறியுள்ளது. தற்போதுள்ள சூழலில் சிறுவாணி நீர்பிடிப்பு பகுதியில் கோடை மழை தொடர்ந்தால் மட்டுமே கனிசமாக அணையின் நீர் மட்டம் உயரும். அப்போது நமக்கு பலன் கிடைக்கும்," என்றார்.

## *கோவை மாவட்டத்தில் பெய்த கோடை மழையினால் விவசாயிகள் மகிழ்ச்சி சூலூரில் ஒரே நாளில் 79 மி.மீட்டர் பதிவு*

*கோவை,ஏப்.25–*

*கோவை மாவட்டத்தில் பெய்து வரும் கோடை மழையினால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சூலூரில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 79 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது.*

*மாவட்டம் முழுவதும் மழை*

*கோவை மாவட்டம் முழுவதும் கடந்த 3 நாட்களாக பலத்த மழை பெய்தது. இந்த மழையினால் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. கடந்த 3 நாட்களாக பெய்த மழை காரணமாக கோடை வெப்பம் தணிந்தது.*

*கோவை மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த மழை அளவு விவரம் வருமாறு:–*

*கோவை விமான நிலையம்–51 மில்லி மீட்டர், மேட்டுப்பாளையம்–36 மி.மீ, பொள்ளாச்சி–5 மி.மீ, கோவை தெற்கு 26 மில்லிமீட்டர், பெரியநாயக்கன்பாளையம்–69 மில்லி மீட்டர், சூலூர்–79 மில்லி மீட்டர், அன்னூர்–51 மி.மீ, வால்பாறை பி.ஏ.பி.–9 மி.மீ, சின்கோனா–11 மி.மீ., வால்பாறை தாலுகா–17 மி.மீ, சின்ன கல்லாறு–54 மி.மீ. தொண்டாமுத்தூர்–21 மி.மீ., சோலையாறு–23 மி.மீ. 90 அடி கொள்ளளவு கொண்ட அமராவதி அணையின் நீர் மட்டம் 21 அடியிலிருந்து 22 அடியாக உயர்ந்துள்ளது. அணைக்கு 87 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.*

*விவசாயிகள் மகிழ்ச்சி*

*கோவை மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஒரே நாளில் சூலூரில் அதிக பட்சமாக 79 மி. மீட்டர் மழை பதிவாகியுள்ளது. அதை தொடர்ந்து சின்னகல்லாறில் 54 மி. மீட்டரும், அன்னூரில் 51 மி. மீட்டரும் மழை பெய்துள்ளது. கோவை மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால் குளங்கள் மற்றும் அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.*

*கோவை மாவட்டத்தில் பெய்துள்ள கோடை மழையினால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதுகுறித்து விவசாயி வழுக்குப்பாறை பாலு கூறியதாவது:–தற்போது கடுமையான மின்சார வெட்டு இருக்கிறது. இதன்காரணமாக விவசாய நிலங்களுக்கு நீர்*

*பாய்ச்ச முடியவில்லை. கடந்த சில நாட்களாக நிலவி வரும் கடும் வெப்பத்தினால் தென்னை மரங்கள் காய்ந்து மட்டைகள் கீழே விழ தொடங்கின. இந்த நிலையில் கோடை மழை பெய்ததால் தென்னை பயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. இதுதவிர மானாவரி பயிர்களான சோளம், எள், நிலக்கடலை ஆகியவற்றை பயிரிடுவதற்கு இந்த மழை ஏற்றதாக உள்ளது.*

*தக்காளி பயிருக்கு ஏற்றது*

*தற்போது கோடை மழை ஓரளவு பெய்து பூமி குளிர்ச்சி அடைந்துள்ளதால் அடுத்து வரும் தென்மேற்கு பருவமழை அதிகம் பெய்ய வாய்ப்புள்ளது. எனவே இந்த ஆண்டு மழை அதிக அளவு பெய்யும் என்று எதிர்பார்க்கிறோம்.*

*மழை பெய்து மண் தளர்வாக இருப்பதால் உழவு ஓட்டி இன்னும் 20 நாட்களில் தக்காளி, கத்தரி நாற்றுகள் விடுவதற்கு இந்த கோடை மழை விவசாயிகளுக்கு கைகொடுத்துள்ளது என்றால் மிகையாகாது. மேலும் ஆடு, மாடு ஆகியவற்றின் மேய்ச்சலுக்கு இந்த மழை பெரிதும் உதவியுள்ளது. இந்த மழையில் மேய்ச்சல் நிலங்கள் நன்கு விளைந்து கால்நடைகளுக்கு உணவு தட்டுப்பாடு ஏற்படாத நிலை உருவாகியுள்ளது.*

*இவ்வாறு அவர் கூறினார்.*

*சிறுவாணி அணையில் மழை*

*கோவைக்கு குடிநீர் சப்ளை செய்யும் சிறுவாணி அணை தற்போது வறண்டுள்ளது. இந்த நிலையில் கடந்த 4 நாட்களாக பெய்த கோடை மழையினால் அணையின் நீர் மட்டம் நேற்று ¼ மீட்டர் உயர்ந்துள்ளது. சிறுவாணி அணையின் நீர் பிடிப்பு பகுதியில் கடந்த 20–ந் தேதி 5 மி.மீட்டரும், 21–ந் தேதி 25 மி.மீட்டரும், 22–ந் தேதி 30 மி.மீட்டரும், 23–ந் தேதி 50 மி. மீட்டர் மழையும் பெய்துள்ளது. இதன்மூலம் சிறுவாணி அணையின் நீர்மட்டம் ¼ மீட்டர் உயர்ந்துள்ளது. அங்கு தொடர்ந்து மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

## தமிழ்நாட்டில் இன்றும் அநேக இடங்களில் மழை பெய்யும் வானிலை மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் பேட்டி

*சென்னை,ஏப்.25–*

*தமிழ்நாட்டில் இன்றும் (திங்கட்கிழமை) அநேக இடங்களில் மழை பெய்யும் என்று சென்னை வானிலை மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.*

*இது குறித்து அவர் கூறியதாவது:–*

*அநேக இடங்களில் மழை பெய்யும்*

*வளி மண்டலத்தில் மேலடுக்கில் சுழற்சி உருவானது காரணமாக தமிழ்நாட்டில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினமும் தமிழ்நாட்டில் அநேக இடங்களில் மழை பெய்துள்ளது. சில இடங்களில் பலத்த மழை பதிவாகி உள்ளது. வழி மண்டலத்தில் உருவான மேலடுக்கு சுழற்சி, தற்போது உள் கர்நாடகத்தில் உள்ளது. அந்த சுழற்சி காரணமாக தமிழ்நாட்டில் அடுத்த 24 மணி நேரத்திற்கு அநேக இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். அதுபோல சென்னையில் வானம் மேக மூட்டமாக காணப்படும். சில இடங்களில் மழை அல்லது இடியுடன்*

கூடிய மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.
இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

## கொலக்கம்பை பகுதியில் பலத்த மழை: விவசாய பயிர்கள் சேதம் குறித்து அதிகாரிகள் ஆய்வு

கொலக்கம்பை, ஏப்.25–
கொலக்கம்பை பகுதியில் பலத்த மழை பெய்தது. இந்த மழையில் சேதமடைந்த விவசாய பயிர்கள் குறித்து அதி காரிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.
இடியுடன் கூடிய மழை
கொலக்கம்பை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளான தூதூர்மட்டம், கெரடாலீஸ், சட்டன், கிளிஞ்சடா, சேலாஸ், அதிகரட்டி, மஞ்சக்கொம்பை, கைக்காட்டி, உலிக்கல் பில்லூர்மட்டம், காட்டேரி ஆகிய பகுதிகளில் கடந்த சில ஒரு வார காலமாக பகல் நேரங்களில் வானம் மேக மூட்டத்துடனும், லேசான வெயிலும், மாலை 6 மணி முதல் அதிகாலை வரை இடியுடன் கூடிய பலத்த மழை பெய்து வருகிறது.
இதனால் கொலக்கம்பை பகுதிகளில் நீராதாரமாக விளங்கும் அணைகளிலும், நீரோடைகளிலும் போதுமான அளவு நீர்வரத்து அதிகமாக காணப்படுகிறது. இதனால் வரும் கோடை காலத்தில் இப்பகுதி மக்களுக்கும், குடிநீர் பற்றாக்குறை ஓரளவு நீங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
மகசூல் அதிகரிப்பு
மேலும் இந்த மழையினால் தேயிலை தோட்டங்களுக்கு கணிசமான அளவு நீர்ச்சத்து கிடைத்து உள்ளது. எனவே பச்சை தேயிலை மகசூல் அதிகரித்து உள்ளது. இதனை தொடர்ந்து கடந்த 2 நாட்களாக இப்பகுதிகளில் பகல் நேரங்களிலும், இரவிலும் இடியுடன் கூடிய கனமழை பெய்தது.
கொலக்கம்பை பகுதிகளில் உள்ள விவசாயிகள் பீன்ஸ், கேரட், உருளைக்கிழங்கு உள்ளிட்ட பயிர்களை விவ சாயம் செய்து வருகின்றனர்.இதில் பெரும்பாலான விவ சாய நிலங்கள் நீரோடை களை ஒட்டி உள்ள பகுதிகளில் உள்ளது.
வெள்ள பெருக்கு
எனவே கடந்த சில நாட்களாக கொலக்கம்பை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் பெய்த பலத்த மழையினால் நீரோடையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. வெள்ளம் விவசாய நிலங்களுக் குள் புகுந்து பயிரிடப்பட்டிருந்த விவசாய பயிர்களை அடித்து சென்றது. விவசாய நிலங்களில் குளம் போல் மழைநீர் தேங்கியுள்ளதால் பயிர்கள் அழுகும் அபாயம் ஏற்பட்டு உள்ளது. இதனால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்படும் அபாயம் உள்ளது.
இது குறித்து மாவட்ட தோட்டக்கலை இணை இயக்குனர் ஆல்துரை கூறிய தாவது:–
நீலகிரியில் தற்போது பெய்துள்ள மழையால் 50 சதவீதத்திற்கும் மேல் விவசாய பயிர்கள் பாதிக்கப்பட்டு உள்ளதாக தெரிய வந்து உள்ளது.
மேலும் இது குறித்து விவசாயிகள் எங்களுக்கு தகவல் தெரிவித்து உள்ளனர். மழையால் சேதமடைந்த பயிர்களின் மதிப்பு குறித்து ஆய்வு செய்ய அதிகாரிகளுக்கு

அறிவுறுத்தப்பட்டு உள்ளது. இதன்படி சேத மதிப்பு குறித்து அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்

## வரத்து அதிமாக இருந்தாலும் வத்தல், பூண்டு தனியா விலை உயர்வு

பதிவு செய்த நாள் 4/24/2011 6:07:23 AM



சென்னை: வரத்து அதிமாக இருந்தபோதிலும், வத்தல், பூண்டு, தனியா விலை அதிகரித்துள்ளது. ஏசி அறைகளில் அவற்றை பதுக்குவதால் இதுபோன்ற நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. குஜராத், மத்தியப் பிரதேசம், தமிழ்நாட்டில் கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் நல்ல மழை பெய்தது. இதனால், இந்த மாநிலங்களில் பயிரிடப்பட்டிருந்த மிளகாய், தனியா, பூண்டு போன்றவற்றின் விளைச்சல் அமோகமாக இருந்தது. சென்னை கோயம்பேடு மொத்த மார்க்கெட்டுக்கு 2 லாரிகளில் வந்து கொண்டிருந்த பூண்டு, தற்போது 10 லாரிகளில் வந்து கொண்டிருக்கிறது. 10 லாரிகளில் வந்து கொண்டிருந்த வத்தல் தற்போது 20 லாரிகளாக அதிகரித்து உள்ளது. இருந்தபோதிலும் வத்தல், பூண்டு, தனியா போன்றவற்றின் விலை அதிகரித்த வண்ணம் உள்ளது.

கடந்த வாரம் ஒரு கிலோ குண்டு மிளகாய் வத்தல் (முதல் ரகம்) ஸி100க்கு விற்றப்பட்டது ரூ.120 வரையும், 2ம் ரகம் ஸி60 முதல் ஸி70 வரை விற்றது ஸி100க்கும், நீண்ட மிளகாய் வத்தல் ரூ.100லிருந்து 120க்கும், தனியா ஸி55லிருந்து ஸி80 வரையும், மலைப்பூண்டு ஸி100 & ஸி110 வரை விற்றது ஸி140க்கும், நாட்டு பூண்டு ஸி70லிருந்து 100க்கும், 2ம் ரகம் ஸி60லிருந்து ஸி80க்கும் விற்கப்பட்டு வருகிறது.

அதேபோல், பாமாயில் கிலோ ஸி56லிருந்து ஸி60க்கும், சன்பிளவர் ஆயில் ஸி68லிருந்து ஸி72க்கும், தேங்காய் எண்ணெய் ஸி120 லிருந்து ஸி125க்கும், 2ம் ரகம் ஸி100லிருந்து ஸி105க்கும், நல்லெண்ணெய் ஸி105லிருந்து ஸி115க்கும், கடலை எண்ணெய் ஸி80லிருந்து ஸி90க்கும் விற்கப்பட்டு வருகிறது. இதேபோல், துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு, பாசிப் பருப்பு போன்றவற்றின் விலையும் சற்று உயர்ந்துள்ளது.

இது குறித்து, தமிழ்நாடு மளிகை வியாபாரிகள் சங்கத் தலைவர் சொரூபன் கூறியதாவது: மிளகாய் வத்தல், பூண்டு, தனியா போன்றவற்றின் விளைச்சல் அதிகமாக இருந்தாலும், இவற்றை மொத்தமாக கொள்முதல் செய்வோர் ஏசி அறைகளில் பதுக்கி வைத்துள்ளனர். விலை குறைய வேண்டிய இந்த நேரத்தில், விலை அதிகரிப்பதற்கு இந்த பதுக்கலே காரணம். பதுக்கலை தடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் இந்த விலை உயர்வு தொடரும் என்றார்.

## குண்டுமல்லி விவசாயிகள் அதிக ஆர்வம்

பதிவு செய்த நாள் 4/24/2011 6:12:55 AM



காட்டுமன்னார்கோவில்: கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் பகுதியில் விவசாயிகள் குண்டுமல்லி பூச்செடி கன்றுகளை உற்பத்தி செய்து வெளி மாநிலங்களுக்கு அனுப்பி வருகின்றனர்.

இத்தொழிலில் ஈடுபட்டுள்ள மணிகண்டன் என்ற விவசாயி கூறும்போது, சமப்படுத்தப்பட்ட நிலத்தில் திண்டுக்கலில் இருந்து வாங்கி வந்த கன்றுகளை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி பதியம் போடுவோம். ஒரு மூட்டை கன்றுகள் ஸி2 ஆயிரத்துக்கு வாங்கி வருவோம். இதை 10 சென்ட் நிலத்தில் பயிரிடுவதற்கு ஸி20 ஆயிரம் வரை செலவாகும். 6 மாதம் கழித்து கன்றுகள் வளர்ந்து வரும் நிலையில் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி ஆயிரம் கன்றுகள் ஸி1,500க்கு விற்பனை செய்வோம்.

சென்னை, கேரளா, சத்தியமங்கலம், ராமேஸ்வரம் என பல பகுதிகளுக்கு விற்பனை செய்வோம். நேரடியாக வந்து வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர் என்றார்.

## உணவு பணவீக்கம் 8.5 சதவீதமாகும்

பதிவு செய்த நாள் 4/25/2011 2:29:00 AM



புதுடெல்லி: பருவ மழை சீராக இருக்கும் என்பதால் இந்த ஆண்டில் நாட்டின் உணவு பணவீக்கம் 8.5 சதவீதமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது விலைவாசிக்கு ஏற்ப உணவு பணவீக்கம் ஏற்ற இறக்கத்தை சந்தித்து வருகிறது. இந்நிலையில் இந்த ஆண்டு பருவ மழை சீராக இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. பருவ மழையின் சாதகமான சூழலால் விவசாய பொருள் உற்பத்தி அதிகரிக்கும் பட்சத்தில் விவசாய துறை வளர்ச்சி 4 சதவீதமாகும்.

எனவே, இந்த ஆண்டின் வரும் மாதங்களில் உணவு பணவீக்கம் 8.5 சதவீதமாகும் என்று எஸ்எம்சி குளோபல் செக்யூரிட்டி தலைவர் சுபாஷ் அகர்வால் தெரிவித்தார். அதிக உற்பத்தியால் விவசாயிகளின் வாங்கும் சக்தி அதிகரிக்கும் என்பதால் நுகர்வு பொருள் மற்றும் மோட்டார் வாகன விற்பனை 25 சதவீதம் வரை அதிகரிக்கும் எனவும் கூறப்படுகிறது.